DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் உலகில் எத்திக்கும் தமிழ் விதம் வாரம் வெளி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1338 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 26, 2021

## Canada's Governor General urged Members of Parliament in her Throne Speech, to learn more about the Generations of the First Nations

## கனடிய பழங்குடி மக்களின் முன்னைய பரம்பரை பற்றி அறிந்து கொள்ளுமாறு ஆளுனர் நாயகம் மேரி சைமன் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள்



கனடிய பழங்குடி மக்களின் முன்னைய பரம்பரை பற்றி அறிந்து கொள்ளுமாறு ஆளுனர் நாயகம் மேரி சைமன் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தார் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஓட்டாவா மாநகரில் புதிய அரசாங்கத்தின் தொடக்க நிகழ்வாக இடம்பெற்ற தனது "சிம்மாசன உரையில்" அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

*(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)*

## காணாமற்போனோர் தொடர்பான அலுவல செயற்பாடுகளை சீர் குலைத்தது ரணில் — மைத்திரி நல்லாட்சி அரசாங்கமே என்கிறார் நியமன எம்.பி சுரேன் ராகவன்



தமிழர் பிரதேசங்களில் காணாமற்போனோர் தொடர்பான அலுவல செயற்பாடுகளை சீர் குலைத்தது ரணில்-மைத்திரி நல்லாட்சி அரசாங்கமே என்று தெரிவித்துள்ள அரசு சார்ந்த நியமன எம்.பி சுரேன் ராகவன் காணாமற் போனோர் 450 பேரின்முறைப்பாடுகள் தமிழில் காணப்பட்ட நிலையில் அதனை மொழிபெயர்ப்பு செய்வதை கூட அன்றைய அரசாங்கம் தட்டிக்கழித்ததாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 2017 ஆம் ஆண்டிலேயே அதன் செயற்பாடுகள் சீர் குலைக்கப்பட்ட தாகவும் அதில் முக்கிய பங்கு தற்போதைய எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஸ்ன் கிரியெல்லவினது என்றும் நேரடியாகத் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்கள் தொடர்பான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### கனடா தமிழ் திருச்சபைகள் இணைந்து நடத்தும் 'ஞாயிறு திருவிருந்து ஆராதனை'

எதிர்வரும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரை.
இடம்- METROPOLITAN CENTER
3840 Finch Avenue East , Scarborough. M1T 3T4
(கென்னடி-பின்ச் சந்திப்புக்கு அருகில்)

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurence;
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
*North York *Scarborough *Mississauga *Brampton *Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### இலங்கைக்குப் பணம் அனுப்ப வேண்டுமா

RemitBee

- 500 டாலருக்கு மேல் அனுப்பும் பணத்திற்கு எந்தவிதமான கட்டணமும் கிடையாது
- *வேகமான பணப்பரிமாற்றம்
- கனடாவில் வேறு யாராலும் தரமுடியாத எக்ஸ்சேஞ்ச் ரேட்டை வழங்குகிறோம்

remitbee.com

Download on the App Store
GET IT ON Google Play

### திருமண மையம்

கனடா, அமெரிக்கா, ஸ்ரீலங்கா & மற்ற நாடுகள்.
மணப்பெண் / மணமகன்
திருமணம் / மறுமணம்
தமிழ் & தெலுங்கு & மலையாளம் & மற்ற மொழிகளும்.
அந்த அந்த நாட்டிலும் & இந்தியாவில் இருந்து மாறி வருபவர்களும் உள்ளனர்.

ஹரி ஐயர் ஜோதிடர்
**24 hours -- 7 days**
**Whatsapp: + 91 86673 25268**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### WALK-OUT BASEMENT FOR RENT

**Steeles / Staines** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட **walk-out basement** உடனடியாக வாடகைக்கு உள்ளது. கார் **parking** ஒன்று வழங்கப்படும்.
தமிழர் கடைகள், பாடசாலைகள் மற்றும் பஸ் வசதிகள் ஆகியன அருகில்.
தனியாக **washer & dryer** ஆகியன வழங்கப்பெறும்.

**தொடர்புகளுக்கு:**
**(416) 579-3022 அல்லது (647) 521-8022**

### DZ Driver Wanted

**DZ driver wanted**
**GTA and surrounding area.**
**Call Nathan.**
**Salary: $20/hr**

**416-520-1324**

or email:

**Sentax72@gmail.com**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

**Call: 416-706-8160**

### CAREGIVER WANTED (LIVE-IN)

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**

# உதயன் கதிரோட்டம்

# தமது தலைவர்களை அடையாளம் காண்பதற்கு இனிமேலும் ஈழத்தமிழர்கள் தாமதிக்கக் கூடாது

இலங்கையின் பாராளுமன்றத்தில் இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் மாறி மாறி ஆட்சி செய்து வருவது போன்று. ஈழத்தமிழர்களின் அரசியல் பாதையில் அவர்களது தலைவர்கள் என்று ஒரு சிலரே மாறி மாறியும் தொடர்ச்சியாகவும் தங்கள் முகங்களைக் காட்டி வருகின்றார்கள்.

தமிழ் நாட்டில் ஊழல் அரசியல் செய்து எவ்வாறு கருணாநிதியும் ஜெயலலிதாவும் கோடிக்கணக்கான பெறுமதி கொண்ட சொத்துக்களுக்கும் மதுபானத் தொழிற்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கும் அதிபதிகளாக இருந்ததை அறிந்திருந்தாலும், எவ்வாறு தமிழ்நாட்டு மக்கள் மாறி மாறி அந்த இரண்டு ஊழல் பேர்வழிகளையும் ஆட்சியில் அமர்த்தினார்களோ. அவவாறே. எமது தாயகத்திலும் தமிழர்களின் அரசியல் தலைவர்கள் தொடர்ச்சியாக தவறுகள் இழைத்தாலும். தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு பதவிகளைப் பெற்ற பின்னர் ‘மௌனமாக’ இருந்தாலும், பெரும்பான்மை இனத்தின் அரசியல் தலைவர்களின் பதவிகள் கவிழ்ந்து போகாமலிருக்க ‘முண்டு’ கொடுத்து. காப்பாற்றியிருப்பினும். காணாமல் போனவர்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் எடுக்காமல் இருந்தாலும். தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளாமல் இருந்தாலும், அவர்களில் பலரையே மீண்டும் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பதையே நாம் தொடர்ச்சியாகக் கண்டு வருகின்றோம்.

இது மாவீரர்களின் மகத்தான நவம்பர் மாதம் ஆகும். இந்த மாதத்தில் எமது மக்கள் கடந்த காலங்களில் மாவீரர் நாள் உரைகளை வன்னியிலிருந்து வரும் காணொளி ஊடாகக் கேட்ட வண்ணம் தமிழீழம் என்ற விடுதலைக் கனவை மனங்களில் நிறுத்திய வண்ணம் இருந்தார்கள். ஆனால் இப்போது காட்சிகள் மாறியே தோன்றுகின்றன. நவம்பர் மாதத்தில் பொய்மை மிகக் கொண்ட முகங்களோடு மண்ணிலும் வெளிநாடுகளிலும் தமிழர்களின் தலைவர்கள் என்ற பெயரோடு சிலர் தோன்றுகின்றார்கள்.

கடந்த வாரம் கனடாவிற்கு வந்து சென்ற இரண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்த நோக்கம் எது என்பதை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும். தாங்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் நலன்களுக்காகவே பாடுபடுகின்றோம் என்று காட்டவே முயன்றுள்ளார்கள்.

இவ்வாறான தலைவர்கள் தொடர்பாக அவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்களை கேட்பதற்கு முன்பதாக அவர்களின் கடந்த கால செயற்பாடுகள் என்ன என்பதை நாமே அறிந்து அவைகள் மூலமாக முடிவுகளை எடுக்க முயலவேண்டும். இவ்வாறானவர்களுக்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அவர்களின் ‘ஆதரவாளர்கள்’ என்று சொல்லிக் கொள்வதற்கு ஆட்களும் அமைப்புக்களும் இருக்க வேண்டும். அதற்காக அவர்கள் தேவையான ஏற்பாடுகளைச் செய்து அதைப் பெற்றுக்கொள்வார்கள். இவ்வாறானவர்களை கொழும்புக்கு கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ‘விருந்தினர்களாக’ வரவேற்றவர்களும் இவ்வாறான தமிழ்த் தலைவர்கள் தான் என்பதை சிலரே அறிவார்கள்.

தாயகத்திலும் அவர்களுக்கு தமிழ் வாக்காளர்களின் ஆதரவு தேவை என்பதற்காக அதற்கான ஆயத்தங்களையும் பிரச்சாரங்களையும் மிகவும் தந்திரமாகச் செய்துகொள்வார்கள்.

மறு பக்கத்தில் தென்னிலங்கையில் அவர்களுக்கு சிங்கள அரசியல் கட்சிகளின் தொடர்புகளும் அவற்றின் அரவணைப்பும் தேவை. அவர்களுக்கு சிங்கள மக்களின் ஆதரவு தேவையே இல்லை. ஆனால் ஆட்சி அமைக்கக் கூடிய சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் யாராக இருந்தாலும். அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் காரியங்கள் ஆற்ற அவர்களிடம் போதிய ‘திறமையும்’ தந்திரங்களும் உள்ளன.

இந்த வகையிலான அரசியல் தந்திரத்தையே நாம் கடந்த காலங்களில் எமது தமிழ் அரசியல்வாதிகளிடம் கண்டோம். அவர்கள் தங்கள் பதவிகளையும் உயிர்களையும் காப்பாற்றிக் கொள்ளும் தந்திரங்களை நன்கு பயன்படுத்தி வருகின்றார்கள். முன்னர் படுகொலை செய்யப்பெற்ற ரவிராஜ் மற்றும் குமார் பொன்னம்பலம் ஆகியோரை சாதாரண சிங்கள மக்கள் கொலை செய்யவில்லை. சிங்கள அரசியல்வாதிகளை அவர்களைக் கொன்றார்கள்.

ஆனால் நாம் சந்திக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் தென்னிலங்கையில் மாறி மாறி வரும் அரசியல் தலைவர்களை தங்கள் பக்கம் இழுத்த வண்ணம் அவர்களது அரசியல் வாழ்க்கை இடையூறுகள் இன்றி தொடர்கின்றது.

இந்த விடயத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எமக்குரிய தலைவர்களை அடையாளம் கண்டு எஞ்சியோரை புறக்கணிக்கும் வகையில் இனிவரும் காலங்களில் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் மாற்றங்கள் நிகழ வேண்டும். இதுவே தற்போது மிகவும் அவசியமானது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

*முன் பக்கத் தொடர்ச்சி...*

## Canada's Governor General urged Members of Parliament ....

## கனடிய பழங்குடி மக்களின் முன்னைய பரம்பரை பற்றி அறிந்து கொள்ளுமாறு ஆளுனர் நாயகம் மேரி சைமன் ...

கனடிய அரசியல் வரலாற்றில் இவ்வாறன ஒரு சிம்மாசன உரை இது வரை இடம்பெறவில்லை எனவும். இதற்கு முதலாவது காரணமாக விளங்குவது தற்போதைய ஆளுனர் நாயகம் மேரி சைமன் அவர்கள் கனடாவின் பழங்குடிகளில் ஒரு பிரிவான “இனுட்“ சமூகத்தைச் சார்ந்தவர் என்பதாகும்.

அதற்கு மேலாக. கடந்த காலங்களைப் போன்று அல்லாமல் இந்த வருடத்திலேயே கனடாவின் பழங்குடி மக்கள் சார்ந்த மாணவ மாணவிகள் கல்வி கற்பதற்காக தேவாலயங்களினால் நிர்வகிக்கப்பெற்ற “வதிவிடப் பாடசாலைகளுக்கு“ அழைத்துச் செல்லப்பட்டு அங்கு பல்வேறு வழிகளில் உயிரிழக்க. தொடர்ந்து அந்த மாணவ மாணவிகளின் உடலங்கள் அதே வதிவிடப் பாடசாலைகள் அமைந்த நிலப்பகுதிகளிலேயே புதைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாகவே கனடாவிற்கான புதிய ஆளுனர் நாயகத்தை சிபார்சு செய்ய வேண்டிய நேரத்தில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் கனடாவின் பழங்குடிகளின் சமூகத்தைச் சார்ந்த மேரி சைமன் அவர்களை சிபார்சு செய்திருந்தார். இவ்வாறான பல காரணங்களின் அடிப்படையில் ஆளுனர் நாயகம் மேரி சைமன் அவர்களின் சிம்மாசன உரையில் அவர் பழங்குடியினர் பற்றிய தனது கரிசனையை காட்டியது தவிர்க்க முடியாதது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்

அன்றைய தினம் ஆளுனர் நாயகம் மேரி சைமன் அவர்களது சிம்மாசன உரை கனடாவின் மூதவை (செனட்சபை) மண்டபத்தில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உரை ஆரம்பமாவதற்கு முன்னர் பல பாராளுமன்றச் சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆளுனர் நாயகம் மேரி சைமன் அவர்கள் தனது சிம்மாசன உரையை ஆற்றும் போது அவரது கணவர் அவருக்கு அருகில் அமர்ந்திருந்தார். இரண்டாவது அடுக்கில் பிரதமரும் சபாநாயகரும் அமர்ந்திருந்தனர்.

அங்கு தனது “சிம்மாசன உரையில்“ தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் முன்னர் வாழ்ந்து மடிந்த பழங்குடி மக்களின் வரலாறு தாம் அங்கத்துவம் வகிக்கும் தற்போதைய தொகுதிகளில் எப்படி இருந்தது என்பதை ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் அறிந்து கொள்ள முயலவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

“நாம் தற்போது. முழு உலகையே அச்சுறுத்தும் “பருவ நிலை மாற்றம்“ தொடர்பாகவும் அக்கறை கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட கனடாவின் ஆளுனர் நாயகம். “அதற்காக நேரம் நெருங்கி விட்டது என்றும் கூறினார்.

தொடர்ந்து ” கனடாவின் பழங்குடி மக்கள் கடந்த கால வாழ்க்கை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை அறிந்து அவர்களுக்கு இழைக்கப்பெற்ற கொடுமைகளின் வலியை குணப்படுத்தும் முயற்சிகளையும் இந்த பாராளுமன்றம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு “நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் அரசின் செயற்பாடுகள் அமைய வேண்டும்“ என்றும் குறிப்பிட்டார்.

கனடாவின் ஆளுனர் நாயகமாக பதவி வகிப்பவர்கள் தமது சிம்மாசனப் பிரசங்க உரைகளை ஆங்கிலத்திலும். பிரன்சு மொழியிலுமே ஆற்ற வேண்டும். ஆனால் மேரி சைமன் அவர்கள் தனது புதவியேற்பு வைபவத்தில் உரையாற்றிய போது தனக்கு உள்ள பிரன்சு மொழி அறிவு போதாது என்பதை நன்கு உணர்வதாகவும். தொடர்ந்து பிரன்சு மொழியை ஆர்வத்துடன் கற்பதற்கு முயன்று வருகின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் செவ்வாய்கிழமை ஆற்றிய சிம்மாசன உரையில் தனது பிரன்சு மொழியிலான உரையை எழுதியே வாசித்தார் என்பதும் அதிலும் பல தவறுகள் காணப்பட்டதாக கனடாவின் பிரன்சு மொழி சார்ந்த தேசிய தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் குறிப்பிட்டிருந்தது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

*(GANESH)*

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**அறிவித்தல்.**

**தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் 27.11.2021.**

**27.11.2021 தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் அன்று மார்க்கம் பெயர் கிரவுண்ட் வெளியரங்கத் திடலுக்கு, வீர வணக்க நிகழ்வுக்கு வருகின்ற பன்னிரெண்டு வயதினரும், பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்டவர்களும் கோவிட் 19 தடுப்பூசி பெற்றுக் கொண்டதற்கான சான்றை (vaccination proof) எடுத்து வரவேண்டும் என்பதுவும், வருகின்ற அனைவரும் முகக் கவசம் அணிந்து வர வேண்டும் என்பதுவும் மார்க்கம் பெயர் கிரவுண்ட் நிர்வாகத்தின் முக்கியமான விதிமுறையாகும் என்பதை அனைத்து மக்களுக்கும் அறியத் தருகின்றோம்.**


**ஒத்துழைப்புக்கு நன்றி.**

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.**

**தொடர்பு இலக்கம் 647 619 3619.**

# நவீன தற்காப்பு ஆயுதங்களை காவலர்களுக்கு கையளிக்காததே, தீரமிக்க காவலர் பூமிநாதன் இழப்பிற்கு காரணம்!

இந்தியா செய்திகள்
India News



**சீமான் அறிக்கை:**
23-11-2021

காவல்துறையினருக்கு நவீன தற்காப்பு ஆயுதங்கள் கையளிக்காத அலட்சியப்போக்கே தீரமிக்க காவலர் பூமிநாதன் இழப்பிற்கு காரணம்! - நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாள சீமான் வேதனை.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,
https://twitter.com/SeemanOfficial/status/1463126206413373440?s=20

திருச்சி மாவட்டம் நவல்பட்டு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதன் ஆடு திருடும் கும்பலால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட செய்தி கடும் அதிர்ச்சியளிக்கிறது. காவல்துறையில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் நவீன தற்காப்பு ஆயுதங்கள் கையளிக்காத தமிழ்நாடு அரசின் தொடர் அலட்சியப்போக்கே தீரமிக்க காவலர் இழப்பிற்கு முக்கியக் காரணமாகும்.

இனியாவது, தமிழ்நாடு அரசு விழிப்படைந்து காவல்துறையில் உள்ள குறைபாடுகளை களைவதற்கு சீரிய நடவடிக்கை எடுத்து சீர்படுத்த வேண்டுமென்று தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்.

அர்ப்பணிப்புணர்வோடு கடமையாற்றி வீரமரணமடைந்த தீரமிக்க காவல் உதவி ஆய்வாளர் பூமிநாதன் அவர்களுக்கு எனது வீரவணக்கம். அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், சக காவல்துறையினருக்கும் எனது ஆறுதல்களைத் தெரிவித்து துயரத்தில் பங்கேற்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஜெயலலிதாவின் வேதா இல்லத்தை அரசுடைமையாக்கியது செல்லாதென நீதிமன்றம் உத்தரவு



ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் வேதா இல்லத்தை அரசுடைமையாக்கியது தொடர்பாக ஜெ.தீபா,ஜெ தீபக் தொடர்ந்த வழக்கில் "ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் வேதா இல்லத்தை அரசுடமையாக்கியது செல்லாது" என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வேதா இல்லத்தை 3 வாரங்களில் தீபக், தீபாவிடம் ஒப்படைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களும் இனி விடுதலையாகவே முடியாதவாறு ஸ்டாலின் பிறப்பித்திருக்கும் புதிய அரசாணை – டிடிவி தினகரன் கண்டனம்



பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இனிமேல் விடுதலையாக முடியாத அளவிற்கு புதிய அரசாணையை தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பிறப்பித்திருக்கிறார் என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

டிடிவி தினகரன் தனது டிவிட்டர் பக்கத்தில், "பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இனி விடுதலையாகவே முடியாதவாறு புதிய அரசாணை பிறப்பித்து இருக்கும் தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவிக்கிறேன். "தமிழக அரசுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 7 தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது பேசிய திரு. ஸ்டாலின், ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகியும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இப்போது "குதிரை கீழே தள்ளி, குழியும் பறித்த கதையாக" அவர்கள் இனிமேல் விடுதலையாக முடியாத அளவிற்கு புதிய அரசாணையைப் பிறப்பித்திருக்கிறார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இதேபோல தாங்கள் தான் சிறுபான்மையினரின் காவலன் என்று கூறி, அந்த மக்களை தொடர்ந்து ஏமாற்றி வரும் தி.மு.க, 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்களின் விடுதலையையும் இந்த அரசாணையின் மூலம் கேள்விக்குறியாக்கி இருக்கிறது. இது குறித்து முதலமைச்சர் உரிய விளக்கம் அளிப்பாரா?" என்று டிடிவி தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



# தமிழகம் முழுவதும் "கலைஞர் உணவகம்".. அரசு அதிரடி அறிவிப்பு

தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு வேண்டிய அனைத்து நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் சிறப்பாக செய்து வருகிறார்.

இந்நிலையில் தமிழகத்தில் உணவு பாதுகாப்பை வலுப்படுத்தவும், கருணாநிதி கண்ட பட்டினி இல்லா தமிழ்நாட்டை உருவாக்கவும், முதல்வர் ஸ்டாலின் ஆணைப்படி தமிழகம் முழுவதும் 500 சமுதாய உணவகங்கள் கலைஞர் உணவகம் என்ற பெயரில் அமைக்கப்படும் என்று அமைச்சர் சக்கரபாணி அறிவித்துள்ளார்.

மேலும் கலைஞர் உணவகங்கள் வந்தாலும் தற்போது செயல்பட்டு கொண்டிருக்கும் அம்மா உணவகங்கள் ஒருபோதும் மூடப்படாது என்றும் அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான புதிய வர்த்தமானி அறிவிப்பு



ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான புதிய வழிகாட்டுதல்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் ஜனாதிபதி செயலாளர் பீ.பி ஜயசுந்தரவினால் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இனிமேல் ஜனாதிபதி சட்டத்தரணியை நியமிக்கும் போது குறித்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை: 14 பேர் மரணங்கள், ஒருவரை காணவில்லை





இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்களில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒரு இலட்சம் குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, 22 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவரை காணவில்லை. 452 வீடுகள் பகுதியளவிலும் 56 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. 30 குடும்பங்களைச் சேர்ந்த 114 பேர் ஆறு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளத்தில் 7 பேரும், அம்பாந்தோட்டையில் ஒருவரும் மற்றும் திருகோணமலையில் 6 பேரும் மேற்படி உயிரிழந்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31 காயங்கள் – சட்டத்தரணி சுகாஸ்

மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31 காயங்கள் இருந்ததாக இன்றைய நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிரேஸ்ட சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்தார்.




கடந்த ஜுன் மாதம் 3ஆம் திகதி இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந்ததாக தெரிவித்து இளைஞர் ஒருவர் நள்ளிரவில் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞன் பொலிஸ் காவலில் உள்ளபோது உயிரிழந்திருந்தார்.

குறித்த இளைஞன் ஐஸ் போதைப்பொருள் பக்கட்டை விழுங்கியதால் அது வயிற்றினுள் வெடித்து உயிரிழந்துள்ளதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்ததுடன் குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதாலேயே உயிரிழந்திருந்ததாக தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திங்கட்கிழமை (22) குறித்த விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் விதுசனின் உடலில் 31 வகையான காயங்கள் அறியக்கிடைத்துள்ளதாகவும் உயிரிழந்த இளைஞர் சார்பில் ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.



பொலிஸார் தெரிவித்த விடயங்களுக்கு மாறான சம்பவம் குறித்த இளைஞனுக்கு பொலிஸ் காவலில் நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸார் ஏற்கனவே குறித்த இளைஞன் தற்கொலை செய்ததாக நீதிமன்றில் பொய்யான தகவலை வழங்கியிருந்தார்கள்.

அதுபொய்யென்றும் குடும்பத்தினர் முன்பாக பொலிஸார் குறித்த இளைஞன் தாக்கப்பட்டிருந்தார் என்றும் நாங்கள் ஏற்கனவே நீதிமன்றுக்கு தெரிவித்திருந்தோம். அது இன்று உண்மையாகியிருக்கின்றது.

நீதிமன்றம் இந்த வழக்கில் மிகவும் கரிசனையுடன் உள்ளதை நாங்கள் அவதானித்தோம். அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியரின் இரண்டாவது உடற்கூற்று பரிசோதனை விரைவாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

உரிய அறிக்கையினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும் என பொலிஸாருக்கு நீதிமன்றம் இறுக்கமான உத்தரவினை பிறப்பித்திருக்கின்றது. சரியான நீதி கிடைக்கும் வரையில் நாங்கள் போராடுவோம் என தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் ஒத்துவைக்கப்பட்டுள்ளது.



# தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ள ஞானசார தேரர்

அதமிழ் அரசியல் கைதிகள் உட்பட தென்னிலங்கை அரசியல் கைதிகளும் மிக விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளதாக எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

அண்மையில் நிறுவப்பட்ட "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயலணியினால் மக்கள் கருத்துக்களை பெறும் நடவடிக்கை நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் சட்டத்தரணிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தார்கள். செயலணியின் தலைவர் ஞானசார தேரர் ஒருநாடு ஒருசட்டம் தொடர்பில் இங்கு தெளிவுபடுத்தினார். வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் செயணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்த கருத்து தொடர்பில் முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவிக்கையில், இந்தக் கலந்துரையாடலில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரைகளை அமைப்பது, எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை, மாவீரர் தினம் தொடர்பில் எமது உரிமை கள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை தொடர்பில் பேசியிருந்தேன்.

அப்போது அவரிடம் இருந்து வந்த பதிலில் அரசியல் கைதிகள் தொடர்பாக உள்ளே இருப்பவர்கள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பேசியுள்ளார். மிக விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிட்டார். இது தொடர்பில் ஜனாதிபதி தன்னிடமும் தெரிவித்ததாகவும் தெரிவித்தார். இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள். மகாவம்சத்தில் தமிழ் பௌத்த துறவிகள் இருந்தமைக்கான ஆதாரம் உண்டு. தமிழ் மக்களின் வழிபாட்டுக்கான உரிமை மறுக்கப்படும் இடங்களை பார்வையிடுவதாக தெரிவித்தார். குருந்தூர் மலையில் கதிர்காமம் போன்று இரு மதத்தினரும் வழிபடக் கூடிய நிலை வருவதனை தான் விருப்புவதாக தெரிவித்தார். நாம் இணைந்து வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார். மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவு கூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். இந்த விடயம் தொடர்பில் தான் முழுமையாக பதில் செல்ல முடியாது எனவும், இருந்தாலும் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக மேற்கொண்ட விடயம் தவறு. அதற்கு அனுமதிக்க முடியாது. உங்களுடைய வலிகள், பிரச்சினைகளை புரிந்திருந்தாலும் இதற்கான பதிலை வழங்கக் கூடிய நிலையில் இல்லை. எங்களுடன் சேர்ந்து இவற்றை மறந்து நீங்கள் பயணிக்க வேண்டும் எனக் கூறினார்.

# மாவீரர் நாள் தடை மனுவை நிராகரித்தது சாவகச்சேரி நீதிமன்றம்!

மாவீரர் தினத்துக்கு தடை கோரி சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் இணைந்து சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் சாவகச்சேரி போலீசாரால் கிஷோர் உட்பட 13 பேருக்கு எதிராகவும் கொடிகாமம் பொலிஸாரால் கிஷோர் நான்கு பேருக்கு எதிராகவும் தடை உத்தரவு பிறப்பிக்க கோரி இன்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைத்தனர். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி யூட்சன் "பெயர் குறிப்பிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதாலும் இலங்கையின் சட்டம் இயற்றுகின்ற உயரிய சபைகளில் இருப்பதாலும் இலங்கையின் சட்டம் தொடர்பாக தெளிவாக அறிந்திருப்பார்கள்.

எனவே அவர்கள் மீது சட்டத்தை மீறுவார்கள் என்ற அடிப்படையில் போலீசாரின் கோரிக்கையை ஏற்று தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது.

ஆனால் பெயர் குறிப்பிட்ட நபர்களும் ஏனையவர்களும் இலங்கையின் சட்டங்களை மீறி ஏதாவது நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்த பொலிசாருக்கு அதிகாரம் உள்ளது. அதனால் போலீசாரின் முன்வைத்த கோரிக்கையை ஏற்று குறித்த நபர்களுக்கு எதிராக தடை உத்தரவை வழங்க முடியாது" என்று தெரிவித்து குறித்த கோரிக்கையை நீதிமன்றம் தள்ளுபடி செய்வதாக நீதிபதி உத்தரவிட்டார்.




குறித்த வழக்கில் பெயர் குறிப்பிட்டவர்கள் சார்பாக சட்டத்தரணி மணிவண்ணன் சட்டத்தரணி சதீஸ்வரன் சட்டத்தரணி குகனேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

# கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக ஏற்பட்ட குழப்ப நிலை



யாழ்ப்பாணம் - கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக துப்பரவு பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் நடந்து கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

கோப்பாய் துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் இடித்தழித்து, பாரிய இராணுவ முகாமை அமைத்து, நிலைகொண்டுள்ளனர். அதனால் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமையாகும்.

இந்நிலையில் தற்போது மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அக்காணியின் முன்பக்கமாக வீதியின் இருமருங்கினையும் துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்போது, கோப்பாய் பொலிஸார் மற்றும் பெருமளவான இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன் சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் சிலர் தாமும் துப்பரவு பணியில் ஈடுபடுவதாக துப்பரவு பணியில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டதாகவும் தெரிய வருகின்றது. இந்த நிலையில் அப்பகுதியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள், அங்கிருந்த ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக புகைப்படம் எடுத்ததுடன் வாகன இலக்கங்களையும் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தன்னை கொல்ல முற்பட்ட பிரபாகரனை கூட தான் பழிவாங்க வில்லை என்கிறார் டக்ளஸ் தேவனந்தா



என்னை கொல்ல பல தடவை முற்பட்ட பிரபாகரனையே பழிவாங்கவில்லை. மாறாக அவரது மரணத்தில் பரிதாபம் ஏற்பட்டது என அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அழிவுகள், இழப்புக்கள், இடம்பெயர்வுகள் எமக்கு வந்திருக்காது. மேலும் பல மடங்கு முன்னுற்றகரமான வாழ்க்கையில் நாங்கள் இருந்திருப்போம். கெடுகுடி சொற்கேளாது என்பது போல அது அப்படியே போய்விட்டது.

கடந்த பாராளுமன்ற தேர்தலிலும்கூட சந்திரகுமார் எம்மோடு சேர்ந்து கேட்டிருந்தால் கட்சிக்கு 3 ஆசனங்கள் கிடைத்திருக்கும். ஆனால் அவருடன் சேர்ந்து கேட்டால் இங்கு வாக்கு விழாது என யாரோ கூறியிருந்த நிலையில் அவர் அதற்கு எடுபட்டு போய்விட்டார். அத அவருடைய விதி. அந்த விதியை மதியால் வெல்ல முடியும் என்று நான் நம்புகின்றேன். ஆனால் அவருக்கு அது முடியாமல் போய்விட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடல் தொழிலோடு சம்மந்தப்பட்டது மாத்திரமல்லாது, சமுர்த்தி உள்ளடங்கிய சகல வேலைகளையும் மேற்பார்வை செய்யவும், அதனை கண்காணிக்கவும் வழிநடத்தவும் விரும்புகின்றேன். அது எனக்குரிய சட்ட கடமைகளாகவும் இருக்கலாம். எனக்குரிய அரசியல் கடமைகளாகவும் இருக்கலாம்.

உங்களுடைய வாழ்வாதாரமும், வாழ்க்கையும் முன்னேறியது போல, தொடர்ச்சியாக மக்கள் இந்த சமுர்த்தி உதவி திட்டங்களில் தங்கியிருக்காமல், யாரையும் எதிர்பார்க்காமல் தங்களுடைய கால்களில் தங்கியிருக்க வேண்டும். பிரதமரின் பிறந்தநாள், ஜனாதிபதியின் பதவியேற்பு உள்ளிட்ட நிகழ்வுகளில் இடம்பெற்ற மத நிகழ்வுகளை மக்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

துர்ரதிஸ்டவசமாக எங்களுடைய தமிழ் அரசியல் எங்களுடைய பிரதேசங்கள் எல்லாவற்றையும் சூனியமாக்கப்பட்டுள்ளது. எனக்கும் அரசுக்கும் உள்ள புரிந்துணர்வுக்கூடாகதான் இவ்வாறான வாய்ப்புக்களை உங்களிற்கு பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் இவ்வாறான மக்கள் கடமைகளை முன்னெடுப்பதற்கு, நீங்கள் எனக்கு பக்க பலமாகவும், அத்துழைப்பாகவும் இருக்க வேண்டும்.

என்னிடம் பழிவாங்கும் நடவடிக்கைகள் இல்லை. நான் பிரபாகரனையே பழிவாங்கவில்லை. என்னை எத்தனையோ தடவை கொலை செய்ய முற்பட்டவன். என்னுடன் இருந்தவர்களை கொன்றவன். என்னுடன் இருந்தவர்களை காயப்படுத்தியவுடன், துரத்தியவன், கடத்தியவன். அவன் இறந்த முறை சம்மந்தமாக எனக்கு பரிதாபம்தான் ஏற்பட்டது. இவ்வாறு அவர் சாகவேண்டிய நிலைக்கு அவனே தனக்குதானே குழுதோண்டிவிட்டான் என பரிதாபம் ஏற்பட்டது.

நான் உங்களிடம் எதிர்பார்ப்பது சட்ட கடமைகள், மக்கள் கடமைகளை மாத்திரமே. நீங்கள் எல்லோரும் பெரும்பாலும் இந்த பகுதியை சேர்ந்தவர்கள். இந்த பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். குறிப்பாக சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக. மாத்திரமல்ல, ஏனைய அமைச்சர்களுடைய வேலைத்திட்டங்களுடன் சேர்த்து நான் அதை மேற்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைய கலந்துரையாடலிற்கு சில உத்தியோகத்தர்கள் வருகை தரவில்லை. அவர்கள் வருகை தராமைக்கான காரணத்தை விளக்கமாக பெற்று தர வேண்டும். எனக்க பழிவாங்கும் எண்ணம் இல்லை. இருந்தாலும் வீம்பு பண்ணினால் நான் அவர்களை இடம் மாற்ற வேண்டி வரும். இது எனது சட்டபூர்வமான மக்கள் கடமை.

பிரபாகரனையே பழிவாங்காத எனக்கு பழிவாங்கும் எண்ணம் கிடையாது. கோபத்தில் சும்மா கதைப்பதேயன்றி மற்றபடி எனக்கு அந்த நோக்கம் இல்லை. நீங்கள் எந்தளவுக்கு எந்தளவு முன்வந்து பங்களிக்கின்றீர்களோ, அந்தளவு தூரம் இந்த சமூகத்தை முன்னோக்கி கொண்டு வரலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.



# சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்றார் அனந்தி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை எனவும் அறைகளிற்குள் விளக்கேற்றி படங்களை பிரசுரிப்பதை விடுத்து பொதுவெளிக்கு வர வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் தினம். அதேபோல மே 18ஆம் திகதி பொதுமக்களிற்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்.

தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் இந்த இரண்டு நிகழ்வுகளையும் தடுத்து வந்திருக்கின்ற நிலையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிற்கு முதல்நாள் சடுதியாக ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக செய்தியை கொண்டுவந்தார்கள்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டால் ஒரு கிழமை, முன்றுநாள், ஐந்து நாள் என்று சென்ற நிலையில் உடினடியாக அதன் முடிவுகளை கூறி கொத்தணி உருவாகுவது போல் மாஜையை காட்டினார்கள்.

எங்களுடைய நிகழ்வுகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபொழுது கொரோனாவை சாட்டாக வைத்துக்கொண்டு அவர்கள் பழிவாங்குகின்ற அல்லது குரல்வளையை நெரிக்கின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்கள்.

கடந்த மாவீரர் தினத்திலும் இவ்வாறு நீதிமன்ற தடைகளை எடுக்கப்பட்டிருந்தது. இம்முறையும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஓடியோடி இந்த தடைகளை நீதிமன்றங்களில் பெற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றார்கள் இந்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்தக்கூடிய சட்டத்தரணிகள் குழாம் இருக்க வேண்டும். அந்த சட்டத்தரணிகள் குழாம் தமிழ்த் தேசியம் சார்ந்து விவாதிக்கவேண்டியவேளை வந்திருக்கின்றது.

மனமுவந்து சட்டத்தரணிகள் குழாம் இதற்கு தயாராக வேண்டும்.

உண்மையில் சுமந்திரனுடைய சட்டம், சட்ட புலமை தமிழ் மக்களிற்கு பயன்பட்டதாக இல்லை. வெறுமனே வீட்டுக்குள் கொழுத்துவதென்பது பொருத்தமானதல்ல.

நாங்கள் சொல்லாவிடினும் வீடுகளில் மாவீரர்களை நினைந்து அவர்கள் விளக்கேற்றத்தான் போகின்றார்கள். ஆனால், உலகிற்கு சொல்வதற்கு ஒரு பொது வெளியில் வரவேண்டும். சகல கட்சிகளிலும் சட்டத்தரணிகள் நிறையப்பேர் இருக்கின்றார்கள்.

இந்த முறையாவது அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களிற்குள் பேசி இந்த விடயத்தை விவாதத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பது இப்பொழுது தேவையாக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா ஓமந்தை பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்கி 5 வயது சிறுவன் பலி!!



வவுனியா ஓமந்தை பாலமோட்டை பகுதியில் இன்று உழவியந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து 5 வயது சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளான்.

குறித்த பகுதியில் உள்ள காணியொன்றினை உழவியந்திரத்தின் மூலம் பண்படுத்தும் நடவடிக்கையில் அதன் உரிமையாளர் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது வாடகைக்கு அமர்தப்பட்ட குறித்த உழவியந்திரத்தின் சாரதி காணியின் உரிமையாளரது மகனையும் அவரது உறவினரது மகனையும் உழவியந்திரத்தில் ஏற்றியபடி நிலத்தினை பண்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார்.



இதன்போது இரு சிறுவர்களில் ஒருவன் திடீர் என கீழே தவறிவீழ்ந்து உழவியந்திரத்திற்குள் சிக்கிபடுகாயமடைந்துள்ளான்.

எனினும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். ஆயினும் முன்னமே சாவடைந்ததாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் பாலமோட்டை பகுதியை சேர்ந்த கந்தலதன் கனிஸன் வயது 5 என்ற சிறுவனே சாவடைந்துள்ளான். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ரொறன்ரோவில் இறையியல் கல்வியில் முதுமானிப் பட்டம் பெற்ற 88 வயதுப் பெண்மணி



கனடா ரொறன்ரோவில் இறையியல் கல்வியில் முதுமானிப் பட்டம் பெற்று 88 வயதுப் பெண்மணியான மோலி சுட்கைடிஸ் தொடர்பான செய்திகள் நாடெங்கும் பரவி வருகின்றன.

கடந்த சனிக்கிழமையன்று டொராண்டோ பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் ரெஜிஸ் கல்லூரியில் இறையியல் படிப்பில் முதுகலைப் பட்டம் பெற்றதன் மூலம். கனடாவில் முதுகலைப் பட்டம் பெற்ற மூத்தவர்களில் ஒருவராக இவர் பெருமிதத்துடன் காணப்பட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய மோலி சுட்கைடிஸ் தனது டிப்ளோமாவைப் பெற நான் சென்றபோது, தான் பதட்டமாக இருந்ததாகவும் ஆனால் இந்த பட்டத்தைப் பெறுவதற்கு கடுமையாகக் கற்றதாகவும் எனவே தனது உழைப்பிற்கு கிடைத்த வெற்றி என்றும் அவர் கூறினார்.

சுட்கைடிஸ் அவர்கள் ஏறக்குறைய 18 ஆண்டுகளாக, ஒவ்வொரு நாளும், கடிகார வேலைகளைப் போலவே, அவள் காலை 9 மணிக்கு எட்டோபிகோக்கில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறி, பேருந்து மற்றும் சுரங்கப்பாதையில் ரெஜிஸ் கல்லூரியின் நகர வளாகத்திற்குச் செல்வார் என்றும் அவரது உயர் கல்வி பல அர்ப்பணிப்புக்களைக் கொண்டது என்றும் அவரது அயலவர்கள் தெரிவித்தார்கள்.

கல்லூரியின் இறுக்கமான சமூகத்திற்குள் அவர் உள்வாங்கப்பட்டிருந்தார் எல்லோரும் அவரை "மோலி" என்று சாதாரணமாகவே அறிந்திருந்தனர்.

மேலும் "அவர் தனது நாட்களின் பெரும்பகுதியை பல்கலைக்கழக நூலகத்தில் கழித்தார் - எப்போதாவது மதியம் நீச்சலுக்காக அருகிலுள்ள கிறிஸ்த்தவ வாலிபர் சங்கத்தின் பயிற்சிக் கூடத்திற்குச் செல்வார். அத்துடன் பல்கலைக் கழகத்திலிருந்து இரவு 10 மணிக்கே வீடு திரும்புவார்" என்று சாதாரணமாகவே அனைவரும் அறிந்திருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டிஸ் கொலம்பியாவில் மோசமான வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் முன்னாள் "ரஹ்பி" விளையாட்டு வீரரும் ஒருவர்



தற்போது கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் சில பகுதிகளில் மோசமான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பு மற்றும் வீடுகள் சொத்துக்கள் அழிந்து போனமை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான நிலையில் கடந்த திங்கட்கிழமை, பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தை வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் நாசப்படுத்தியபோது, டீன் ஹாப்கின்ஸ் என்பவர் தனது நெருங்கிய நண்பரின் மனைவியிடமிருந்து தனது கணவரைக் காணவில்லை எனக் கூறி ஒரு அதிர்ச்சி தரும் அழைப்பைப் பெற்றார்.

அந்த தொலைபேசி அழைப்பு ஹாப்கின்ஸ்க்கு பல மன அழுத்தம் நிறைந்த நாட்களைத் கொடுத்தது, தொடர்ந்து தனது பழைய ரக்பி நண்பன் ஸ்டீவன் டெய்லர் இறந்துவிட்டதாக உறுதிசெய்யப்பட்டபோது கண்ணீர் விட்டு அழுது புலம்பினார்.

வெள்ளச் சகதியில் அகப்பட்டு இறந்த டெய்லர் பி.சி. கட்டுமானப் பணிக்காக ஒரு வருடத்திற்கு முன்பு கல்கரியில் இருந்து பிரிட்டிஸ் கொலம்பியாவிற்கு வந்ததாகவும் கடந்த வார இறுதியில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் ஆகியவை பாதித்த பகுதிகளில் ஒன்றில் வாகனம் ஓட்டிக் கொண்டிருந்த போது அவரது மனைவி அவருடனான தொடர்பை ஏற்படுத்தியபோது, அவருக்கு உதவி தேவைப்பட்டதை அவர் உணர்ந்தார் என்றும் ஹாப்கின்ஸ் தெரிவித்தார்.

அவருக்கு கிடைத்த தகவல்களின் அவரது நண்பரான டெய்லர் வான்கூவருக்கு வடக்கே வேலை செய்யும் தளத்தில் இருந்ததாகவும் அங்கு மோசமான வானிலை காரணமாக வேலைத்தளம் மூடப்பட்டதாகவும் எனினும் மோசமான நிலையில் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தாலும் நண்பர் டெய்லர் அவர்கள் வீட்டிற்கு செல்ல முடிவு செய்தார் என்றும் தெரியவந்தது.

ஹாப்கின்ஸ் டெய்லரின் சக ஊழியர்களை அழைக்கத் தொடங்கினார் மற்றும் லில்லூட்டின் தெற்கே ஏற்பட்ட மண்சரிவு பற்றிய நேரில் கண்ட சாட்சிகளிடமிருந்து மிகவும் கவனமாகக் கேட்டறிந்தார். டெய்லரைப் தங்கியிருக்கலாம் என்று கருதப்பட்ட் ஹோட்டல்களை அழைத்தார்.

இதேவேளை. டெய்லரின் மனைவி காணாமல் போனவர் பற்றிய தகவல் வழங்கும் அலுவலகத்தில் தனது கணவர் தொடர்பான விபரங்களை பதிவு செய்தார்.

நாட்கள் கடந்துவிட்டன, அவர்கள் நம்பிக்கையுடன் இருந்தனர், என்றார். ஆனால் பின்னர் ஆர்சிஎம்பி எனப்படும் மத்திய காவல்துறை அதிகாரிகள் புதன்கிழமை பிற்பகுதியில் டெய்லரின் மனைவிக்கு தொலைபேசியில் அழைத்து. அவர்கள் மூன்று உடல்களைக் கண்டுபிடித்ததாகவும், அவற்றில் ஒன்று அவர் அளித்த அடையாளங்களுடன் பொருந்துவதாகவும் கூறினார்கள்.

குறிப்பிட்ட விளையாட்டு வீரர் வெள்ளத்திலும் வெள்ளச் சகதியிலும் அகப்பட்டு மரணமடைந்துத தொடர்பாக தகவல் தெரிவித்த ஆர்சிஎம்பி எனப்படும் மத்திய காவல்துறை அதிகாரிகள் மாகாணத்தின் லில்லூட் மற்றும் பெம்பர்டன் இடையே நெடுஞ்சாலை 99 இல் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் இருந்து, லேக் ரோடு எனப்படும் பாதையின் ஒரு பகுதியில் இருந்து மூன்று ஆண்களின் உடல்கள் மீட்கப்பட்டதாக சனிக்கிழமை தெரிவித்தார்கள். கடந்த வாரத்தில் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அந்த மண்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அப்போது நான்காக உயர்ந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பெண் ஒருவரின் சடலம் கடந்த திங்கட்கிழமை வெகு தொலைவில் பணியாளர்களால் மீட்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது, "எங்கள் நகரம் மற்றும் மாகாணம் முழுவதும் நூற்றுக்கணக்கான, இல்லாவிட்டாலும் ஆயிரக்கணக்கான ரக்பி நண்பர்கள், வீரர்கள் இருப்பார்கள், அவர்கள் அதே உணர்வுடன் இருப்பார்கள். அவர் அப்படிப்பட்ட மனிதர்", என்று ஹாப்கின்ஸ் கூறினார், மேலும் டெய்லரின் மனைவியின் பாதிப்பை தாங்கள் நன்கு உணர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"ஒருவரை இழப்பதற்கும், குறுகிய காலத்தில் எங்கள் வாழ்க்கையிலிருந்து யாரோ ஒருவர் பறிக்கப்படுவதற்கும் வித்தியாசம் உள்ளது. இவ்வாறான ஓர மனப் பாதிப்பு தான் இவரது மரணத்தின் மூலம் எமக்குக் கிடைத்த ஒரு சஞ்சலமான அனுபவம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கனடா மகாஜனா கல்லூரி பழைய மாணவர்களின் பாராட்டுவிழாவும், இரவு விருந்துபசாரமும்



மிக நீண்ட நாட்களின் பின் கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் "கலேஸ்நைட்" இரவு விருந்துபசாரம் நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி 2021, மாடி கிறாஸ் பாங்குவிட் மண்டபத்தில் நடந்தேறியது. இந்த விருந்துபசாரத்தில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

கோவிட்-19 பேரழிவு காரணமாக இரண்டு வருடங்களாக கனடாவில் மக்கள் வீடுகளில் முடக்கப்பட்ட நிலையில் இருந்தனர். கனடாவில் இயங்கும் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும், யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கும் இடையே கனடாவில் நடைபெறும் சினேகபூர்வமான துடுப்பாட்ட விளையாட்டுப் போட்டியில் கடந்த 3 வருடங்களாக தொடர்ந்தும் மகாஜனக்கல்லூரி வெற்றி ஈட்டியதைக் கொண்டாடும் முகமாக இந்த ஒன்றுகூடலுடன் கூடிய விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டது. தனிப்பட்ட முறையில் எல்லோரையும் தொலைபேசியில் அழைத்து விருந்துபசாரத்திற்கு அங்கத்தவர்களை வரவழைத்த நிர்வாகசபை அங்கத்தவரான கி. பாலஸ்கந்தன் அவர்களையும், நிர்வாகசபை அங்கத்தவர்களையும் எல்லோரும் பாராட்டினார்கள்.

கனடா தேசிய கீதம், கல்லூரிக்கீதம் ஆகியவற்றுடன் விழா ஆரம்பமானது.

சங்கத்தலைவர் ச. புவனச்சந்திராவின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கல்லூரியின் பழைய விளையாட்டு வீரர்களான பி. பாலசிங்கம், வி.ரி. மகாலிங்கம் போன்ற சிலர் தங்கள் காலத்து விளையாட்டு போட்டி அனுபவங்களை விருந்துனருடன் பகிர்ந்து கொண்டனர். யூனியன் கல்லூரி பழைய மாணவர் சார்பாக யாழ்கோபன் பாலசுந்தரம் உரையாற்றினார். அவர் தனது உரையில் மகாஜனக் கல்லூரி வீரர்கள் உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற போது, யூனியன் கல்லுர்ரி மாணவர்கள் தெல்லிப்பழை சந்தியில் இருந்து மகாஜனக் கல்லூரிவரை அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவம் செய்ததை நினைவு கூர்ந்தார்.

எழுத்தாளர் குரு அரவிந்தன் தனது உரையில் தனது காலத்தில் மகாஜனக்கல்லூரி உதைபந்தாட்டத்தில் பங்கு பற்றி வெற்றி பெற்ற போது, கொக்குவில் சந்தியில் நடந்த ஒரு அசம்பாவிதத்தைக் குறிப்பிட்டு, தோல்விகளையும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும், அதைத்தான் விளையாட்டுப் போட்டிகள் எமக்கு எடுத்து அறிவுறுத்துகின்றன. இன்று யூனியன் கல்லூரி பழைய மாணவர்கள் எம்முடன் கலந்து கொண்டதில் நாம் பெருமைப்படுகின்றோம், காலம் எல்லாவற்றையும் கடந்து செல்லும் என்று குறிப்பிட்டார். இதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல, படிப்பிலும் பழைய நிலைக்கு மகாஜனா திரும்ப வேண்டும் என்று காப்பாளர்களான என். சாந்திநாதன், கே.ஜெயேந்திரன் ஆகியோர் குறிப்பிட்டு வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்தனர்.

இந்த விழாவில் துடுப்பாட்ட வீரர்கள் விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர். ராஜினி விமலகாந்தன் நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டு நடத்தினார். விருந்துபசாரத்தைத் தொடர்ந்து நிர்வாகசபை அங்கத்தவர் சார்பில் ரதி சாம்பவலிங்கம் அவர்களின் நன்றியுரையுடன் பாராட்டுவிழா இனிதே முடிவுற்றது.

# ரொறன்ரோவில் அமைந்துள்ள கனடாவிற்கான இலங்கை உதவித் தூதுவரின் அலுவலகம் இடம் மாறியது தொடர்பான அறிவித்தல்

ரொறன்ரோவில் அமைந்துள்ள கனடாவிற்கான இலங்கை உதவித் தூதுவரின் அலுவலகம் இடம் மாறியது தொடர்பான அறிவித்தல் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. தமிழ் மக்களின் நலன் கருதி இந்த தகவலைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

Kindly note that the Consulate General of Sri Lanka will be relocated at the following address, with effect from 01.12.2021:

**Consulate General of Sri Lanka**
**1 Eglinton Avenue East #501**
**Toronto, Ontario M4P 3A1**

While this transition takes place, communication systems will be disrupted from Thursday 25.11.2021 to Tuesday 30.11.2021. The Consulate will be opened for Consular Services on Thursday 02.12.2021.

**srilanka@bellnet.ca, slcg.toronto@mfa.gov.lk**
**Kapila S. Jayaweera**
**Consul General**
**23.11.2021**

# மாவீரர்களை வணங்குதல் செய்வோம்




எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய
இன்பத் திருநாட்டை...
பிந்திய பகைவர் பேயினும் கொடியவர்
திருடிய செயல் கண்டு...
சிந்திய இரத்தம் பாய்ந்தது மண்ணில்
சீறி எழுந்தனர் சினத்துடன் புலிகள்!
வந்திடும் பகைவனை வாளினைக் கொண்டு
வேருடன் அழித்தனர்!
மந்திரம் சொல்லி மாய்த்தது போன்று
வஞ்சகப் பேய்களின் வாலினை வெட்டினர்!
சுதந்திரம் என்ன? சுக்கா! மிளகா!
பந்தினைப் போன்று சுழன்றனர் எங்கள் சந்ததி மைந்தர்!
சந்தனம் பூசும் சடங்கு மறந்தனர்.
சாதிமல்லிகை வாசம் துறந்தனர்.
வேந்தனல் குளித்து மாய்ந்தனர் அல்லர்
சுதந்திரச் சுவாலையின் சூரியப் பூக்களாய்
மலர்ந்தனர் மண்ணில்!
இங்கிவரர் விதைத்தது சுதந்திர விதைகள்
பொங்குதே உள்ளம் தம்பிகள் செய்த
தியாகம் கண்டு!
மங்குமா எங்கள் மானம் வீரம்,
சங்கே முழங்கு! தமிழே முழங்கு!
சிந்திய இரத்தத் துளிகளின் மண்ணை
சிவசிவ எனவே நெற்றியில் பூசு!
கத்தும் கடலின் பேரலையொலியுடன்
செத்தும் வாழும் மாவீரர் தியாகம்!

- வீணைமந்தன்

# TAMILS SOCIETY OF PEEL

## பீல் தமிழ் முதியோர் சங்கம்

Not profit Registration # 1406004 (Established in 1999)

**JOB POSTING – PROJECT COORDINATOR** **DATE NOVEMBER 1 2021**

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors & others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active & healthy lifestyle by organizing weekly activities and health seminars.

The project coordinator will report to the STSP secretary & will work on.

- Ensuring project activities adheres to provided timelines & deliverables
- Ensuring documentation is maintained throughout the length of the project
- Communicating plans, actions, & issues with Board of directors
- Working with the STSP treasurer to record all financial transactions & creating monthly financial reports for projects
- Analyzing project data & producing progress reports
- Teaching basic computer programs such as Word, Excel & Zoom to seniors
- Maintaining & updating the STSP Webpage periodically
- Support in organizing the weekly activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:

- Diploma/Degree in Accounting & Computer programs
- Two years' experience working on computerized accounting such as Quick Books
- Experience in teaching basic computer programs
- Experience on designing & updating websites
- Effective interpersonal, communication & organizational skills
- Working knowledge of community resources & services for seniors in Peel & relevant government programs and policies
- Ability to work with a teams of seniors
- Fluency in Tamil & English languages

Salary and benefits: Negotiable & according to the experience
Duration of engagement:
Minimum of one year on part time basis with possible extension.
Minimum 20 hours per week working hours required.

Deadline for application: November 10, 2021
Please forward your application with your updated resume by email to:
info@peeltamilseniors.ca
Nadarajah Moorthy
Secretary

**Cell: (416) 473-5380, nmoorthy10@gmail.com**

250 Dundas Street West , Unit 206, Mississauga, Ontario, L5B 1J2
Tel: 905-290-3000
Email: info@ peeltamilseniors.ca, peelseniortamils@hotmail.com
Visit us at www.peeltamilseniors.ca


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · BMO Insurance

Are you getting Million Dollar advice?

# ஜனநாயகத்தை பாதுகாக்கும் ஊடகத்துறைக்கே நீதிவழங்க முடியாத ஜனநாயகமே இலங்கையில் உள்ளது — பாராளுமன்றில் செல்வம் எம்.பி

இன்றும் கேள்விக்குட்பட்டே ஊடக சுதந்திரம் இலங்கையில் உள்ளது. படுகொலைசெய்யப்பட்ட ஊடகர் விடயத்திலேயே நீதி மறுக்கப்படுகின்றபோது என்ன ஜனநாயகம் இருக்கின்றது புர்ந்துகொள்ள முடிவதாக பாராளுமன்றில் உரையாற்றிய் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வெளிவிவகார மற்றும் ஊடக அமைச்சுக்களுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நேற்று வியாழக்கிழமை(25) உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தொரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்துறையை பாதுகாப்பதும் ஊடகர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் நாடு அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. நாட்டில் போர் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்பாகவும் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவை எதற்குமே நீதி கிட்டவில்லை.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன்(2000), ஐயாத்துரை நடேசன் (2004), தர்மரட்னம் சிவராம்(2005), சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (2007), செல்வராஜா ரஜீவர்மன் (2007), லசந்த விக்கிரமதுங்க(2009), பரணிரூபசிங்கம் தேவகுமார்(2009) என நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

உதயன் மற்றும் மகாராஜா ஊடக வலையமைப்பு உள்ளிட்ட பல நிறுவனங்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. இவ்வாறாக ஊடகத்துறை மீதான அடக்கு முறைகளும் ஒடுக்குமுறைகளும் மிலேச்சத்தனமான கருத்துச் சுதந்திர மீறல்களும் இந் நாட்டின் கறை படிந்த வரலாறுகளாகக் காணப்படும் போது இந்த நாட்டில் இவை எவற்றுக்காவது நீதி வழங்கப்பட்டுள்ளதா எனக் கேட்க விரும்புகின்றோம்.

ஊடக படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு நிச்சயமாக அரசாங்கம் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடமை காணப்படுகின்றது. ஆனால் தங்களது அரசாங்கத்தின் கடந்த ஆட்சியில் ஏராளமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும் அவை அனைத்தினதும் கோவைகளும் இலாவகமாக முடப்பட்டுள்ளன. இறுதி யுத்தத்தில் பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறாக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களும் எந்த நீதியும் கிட்டாது தவிக்கின்றனர்.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னி மாவட்டத்தில் கணவன் ஊடகத்துறையில் பணியாற்றியதன் காரணமாக குடும்பத்தலைவனை இழந்து பல தாய்மார்கள் வாழ்வாதாரம் கூட இன்றி இன்னல் படுகின்றனர். தங்களது குடும்பத்தினை வாழ்வாதார ரீதியாகக் காப்பாற்ற வேண்டிய கணவனை, தந்தையை இழந்த நிலையில் மெனிகளாக நடைபிணங்களாக அலைகின்றனர். எனவே ஒவ்வொரு இழப்பினையும் சரியாக ஆராய்ந்து நீதியுடன் கூடிய தீர்வுகள் முன்வைக்கப்படவேண்டும்.

அரசாங்கம் இந் வரவு செலவுத்திட்டத்திலே கடந்த ஆட்சியில் பழிவாங்கப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்படுபவர்களுக்காக நூறு மில்லியன்களை ஒதுக்கியுள்ளது. ஆனால் இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்காக சட்டத்திற்குப் புறம்பாக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள அவர்களது குடும்பங்களுக்கு நிதியைப் பெற்றக்கொடுத்து அவர்களுக்கான வாழ்வாதாரத்தினை வழங்கவேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது என்பதை உணர்ந்து செயற்படவில்லை.

போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் வாழ்வாதாரமும் எவ்வாறாக அரசாங்கத்தின் கவனிப்பின்றி காணப்படுகின்றதோ அதுபோன்றே இழப்புக்களைச் சந்தித்த ஊடகவியலாளர்களின் குடும்பங்களும் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்தவர்களை அரசியல் ரீதியில் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது. அவ்வாறான நிலைமைகளே பல தசாப்தங்கள் கடந்துள்ள போதும் ஊடகர் படுகொலை விசாரணைகள் கிடப்பில் கிடப்பதற்கான காரணங்கள் ஆகும்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் விடயத்தில், கடந்த நல்லாட்சிக்காலப்பகுதியில் நீதி விசாரணைகளுக்குப் புறம்பாக வாழ்வாதாரம் இழந்துள்ள அவர்களது குடும்பங்களுக்கு நலத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டன. பிரதமர் அலுவலகத்தின் தலையீட்டில் குழு ஒன்று அமைக்கப்பட்டு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் நல்லாட்சியில் இடையில் நிலவிய குறுக்கீடுகளும் புதிய அரசாங்கத்தின் பதவியேற்பும் அந் நடவடிக்கைகளை நிராகரித்துவிட்டன.

அடிப்படையில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் நீதி விசாரணையில் தலையீடு இன்றி மேலும் ஓர் செயற்றிட்டமாக வாழ்வாதார இழப்பீடு அளிக்கும் பொறிமுறையை ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவை அனைத்தும் நிறுத்தப்பட்டு விட்டன. அடிப்படையில் நேற்றுக் கூட யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஊடக அமையத்தினருடன் நான் கலந்துரையாடிய போது பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதுவும் சென்றடையவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்கள்.

ஊடகவியலாளர்களைப் பொருத்தளவில் அவர்கள் மக்களின் நலன்களுக்காக தினமும் உழைப்பவர்கள். அவர்கள் இந்த கொவிட் காலப்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அடிப்படையில் சுயாதீன ஊடகவியலாளர்கள் பலர் பல்வேறுபட்ட இடர்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்த நிலையில் அரசாங்கம் அவர்களுக்கு சலுகையளிக்க முன்வரவேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தில் இணைய இணைப்புக்கள் மற்றும் பொதுப்போக்குவரத்தில் கட்டணச்சலுகையளிப்பு போன்றவற்றினை ஏற்படுத்துவது சிறந்ததாகும்.

மேலும் கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரியும் ஆசிரிய பீட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்துமாறு கோருகின்றேன். பிராந்திய செய்தியாளர்களுக்கு இலகு கொடுப்பனவு மோட்டார் சைக்கிள் திட்டங்களை அமுல்படுத்தவேண்டும். நோய்வாய்ப்படும் ஊடகவியலாளர்களுக்கு விசேடமான காப்புறுதித்திட்டம் ஒன்றை முன்வைக்கக் கோருகின்றேன். இன்றும் நோய்வாய்ப்பட்ட நிலையில் சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர் தனபாலசிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் மாணிக்கவாசகம் போன்றோர் இன்னல் படுகின்றனர். இவர்கள் போன்றவர்கள் நியாயத்திற்காக ஆற்றிய பங்களிப்பை நாம் மனதில் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், ஊடகத்தறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படுவது அவசியமாகும். இன்றும் வடக்குக் கிழக்கு ஊடகவியலாளர்கள் விசாரணை என்ற பெயரில் அடிக்கடி பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்படுகின்றார்கள். இது அவர்களது கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தையும் தகவல் பெறும் சுதந்திரத்தையும் மீறுவதாகும். கடந்த மாவீரர் தினத்தில் உதயன் பத்திரிகை படம் ஒன்றை வெளியிட்டமைக்காக பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் வழக்கொன்றை எதிர்கொள்ள நேர்ந்தது. இதேவேளை மாவீரர் தின காலப்பகுதியில் ஊடகவியலாளர்களின் தொழில் உரிமையினைப் பறிக்கும் வகையில் பொலிசாரினால் வழக்குகள் தொடுக்கப்படுகின்றன.

இந் நிலைமைகள் அவர்களது தொழிலைச் சிக்கலுக்குள் தள்ளியள்ளது. எனவே ஊடகத்தறையின் சிறப்பு உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அது இந்த நாட்டில் ஜனநாயகம் ஓரளவுக்கு ஏனும் வாழ்வதற்கு அவசியமானது. இவை குறித்து இந்த பாராளுமன்றம் விசேட கவனம் செலுத்த வேண்டும். பாராளுமன்றில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



# "ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியின் தலைவரை மாற்றுங்கள்" என ரிஷாட் பதியுதீன் கோரிக்கை!

இலங்கை செய்திகள்
Sri Lanka News




இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதனாலேயே, யுத்தம் முடிவடைந்தும் இந்த நாடு இன்னும் முன்னேற்றம் அடையாதிருப்பதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, "ஜனாதிபதி அவர்களின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பாக ஒரு விடயத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, இனங்களுக்கிடையே உறவுப் பாலத்தை ஏற்படுத்துவதன் மூலமே இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இனங்களுக்கிடையே நல்லுறவும், முறையான சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, மதங்களுக்கு மதிப்பளிப்பதன் காரணமாகவே அந்த நாடுகள் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளன.

இலங்கையிலே அத்தனை வளங்கள் இருந்த போதும், இனங்களுக்கிடையிலே முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டதனாலேயே, முப்பது வருட யுத்தம் இடம்பெற்றது. அதுபோன்று, கடந்த பத்து வருடங்களாக முஸ்லிம்களை குறிவைத்து தாக்குதல் மற்றும் அடாவடித்தனங்கள் இடம்பெற்றன.

இதன் தொடர்ச்சியாகவே, பயங்கரவாதி சஹ்ரானின் கேடுகெட்ட செயல்களால் சமூகங்கள் மேலும் துருவப்படுத்தப்பட்டன. இந்த தாக்குதலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். அந்த ஆணைக்குழு அறிக்கையின் படி தாக்குதலுக்கான பத்துக் காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. பயங்கரவாதிகள் கூறிய காரணங்களை ஏற்றுக்கொண்டு, அதனை நான் இங்கு நியாயப்படுத்த வரவில்லை. இந்தத் தாக்குதலில் சூத்திரதாரி உட்பட இதில் ஈடுபட்டவர்கள், உதவி செய்தவர்கள் அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

அந்த ஆணைக்குழு அறிக்கையில், முதலாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு அல்லாஹ்வை ஏசியதாலும், மூன்றாவது இடத்தில் சொல்லப்பட்டவாறு "அல்லாஹ் மீண்டும் பிறப்பார்" என்று ஞானசார தேரர் கூறுகி-றார் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான ஒருவரை "ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணிக்கு தலைவராக நியமித்திருக்கின்றார்கள். எனவே, அந்த செயலணியின் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்கி, சிறந்த மதகுரு ஒருவரை அல்லது புத்திஜீவி ஒருவரை நியமிக்க வேண்டுமென கோருகின்றேன்" என்றார்.

# பருத்தித்துறை மாவீரர் தின ஏற்பாடுகளிலும் படையினரால் அச்சுறுத்தல்

பருத்தித்துறை முனைப்பகுதியில் கடந்த வருடங்களில் மாவீரர் தின நினைவேந்தல் நடைபெற்ற இடத்தில் 24ம் திகதி புதன்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சிரமதானப் பணிகள் நடைபெற்றது. அதன்போது அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அங்கு சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தவர்களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியும், வாகன இலக்கங்களையும் பதிவு செய்துள்ளனர். அத்துடன் சிரமதானம் முடிந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் தத்தமது வாகனங்களில் திரும்பிய வேளையில் மோட்டர்சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்து வந்தும் அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சிரமதானத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.



# கிண்ணியாவில் வியாழக்கிழமையன்று துக்க தினம் அனுஷ்டிப்பு!



திருகோணமலை - கிண்ணியா பகுதியில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

படகுப்பாதை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபங்களை தெரிவிக்கும் வகையிலும் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய வேண்டியும் 25ம் திகதி வியாழக்கிழமை கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய, இன்றைய தினம் அனைத்து வீடுகள், கடைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வெள்ளை கொடிகளை பறக்கவிட்டு, அமைதியான முறையில் துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை மூடி துக்க தின அனுஷ்டிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கிண்ணியா சிவில் சமூக ஒன்றியம் அழைப்பு விடுத்தது.

ஒன்றுகூடல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தவிர்த்து அனைவரும் தங்களின் வீடுகளிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட பிரேர்தனைகளில் ஈடுபடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியம், பள்ளிவாயில்கள் சம்மேளனம், உலமா சபை, ஷிரா சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து இந்த கோரிக்கையை விடுத்தன.

குறிஞ்சாக்கேணி பகுதியில் பாலம் இன்மையால் படகுப்பாதை போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் ஏற்பட்ட விபத்தில் படகுப்பாதையில் பயணித்த பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 06 பேர் உயிரிழந்தனர்.

நீரில் மூழ்கிய போது காப்பாற்றப்பட்டவர்களில் 19 பேர் தொடர்ந்தும் திருகோணமலை மற்றும் கிண்ணியா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே படகுப்பாதை சேவையை முன்னெடுத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவரும் எதிர்வரும் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

படகுப்பாதையின் உரிமையாளர், அதனை செலுத்துபவர் மற்றும் போக்குவரத்து கட்டணம் அறவிடும் நபரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

திருகோணமலை - கிண்ணியா படகு விபத்து குறித்து செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (23) கிண்ணியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் நான்கு சிறுவர்கள் உட்பட ஆறு பேரின் உயிரைப் பறித்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணையை கோரியுள்ளதுடன் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.


ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஊடகவியலாளர்களை பணிகளைச் செய்யவிடாமல் தடுத்து, விபத்து நடந்த இடத்தில் இருந்து விரட்டியடித்து குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளரான அப்துல் சலாம் முஹம்மட் யாசீம் என்பவர் தாக்கப்பட்ட பின்னர் விபத்து தொடர்பான நேர்காணல்கள் மற்றும் உரிய தகவல்கள் அடங்கிய கையடக்கத் தொலைபேசியை கும்பல் பலவந்தமாக எடுத்துச் சென்றது தொடர்பாக கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு (CIB (1) 10/291) பதிவு செய்துள்ளார்.

கிண்ணியாவில் படகு விபத்து தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சோகமாக இருந்தாலும், பொதுமக்களின் கோபத்தை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும், உண்மையை சரியான நேரத்தில் மற்றும் அனைத்து விவரங்களுடனும் தெரிவிக்கும் ஊடக உரிமையை எந்த தரப்பினரும் கேள்விக்குட்படுத்தவோ அல்லது தடுக்கவோ கூடாது.

ஊடகவியலாளர்களின் தாக்குதலையும், அவர்களின் தொழில் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதையும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) ஒரு பாரதூரமான சம்பவமாகக் கருதுவதுடன், அதனை வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாட்டின் எந்தப் பகுதியிலும் தற்போதுள்ள சட்டத்தை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தை உடனடியாக விசாரணை செய்து, அதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அரசாங்கத்தை கோறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


FMM Sri Lanka Free Media Movement

2021.11.24

... CIB (1) 10/291 ...

Free Media Movement
Convener | Lasantha De Silva +94 71 166 7938 | Secretary | Hanu Ibrahim +94 77 741 2995
Treasurer | Ananda Jayasekara +94 77 312 4850 Assistant Secretary | Niranjani Roland +94 76 022 2798
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk , www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com Facebook https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka



# Let This Sadist Policy of Banning The Right to Mourn The Dead End

**- Siva Parameswaran Senior International journalist (London)**

The right to mourn is akin right to life according to international covenants.

But the unrelenting Sri Lankan hard-line regime has put into practice the arm-twisting strategy of obtaining restraining orders against dozens of persons to mourn the dead. As the 'Maaveer-ar Naal' approaches, security has been tightened in the North and East in particular the areas which suffered the most in the war.



Come November, the Sri Lankan government goes into panic mode and the Tamil people even lighting lamps on their traditional festivals becomes allergic to the government. It's part and parcel of Tamil culture to light a lamp on any occasion in particular remembrance days.

Continuing its policy of racism and antipathy towards minorities, in particular the war affected Tamils the Rajapaksa regime has again used its state apparatus-the draconian police and the dreaded military which is accused of war crimes to prevent the families of those who lost their kith and kin during their annual remembrance event.

Police have obtained restraining orders against numerous individuals to stop them from lighting lamps and remember those who died during the three decades of the brutal civil war.

The maximum such restrictions have been obtained in the Mullaitivu district which suffered the worst during the final phase of the war.




Echoing what the Foreign Minister Prof G.L. Peiris told the media in Colombo "that under the guise of mourning the dead, the event is used to glorify the LTTE which the government will not allow"; the Officer in Charge of the PTK police station informed the court while seeking restraining orders that he has received information from the military and police intelligence units that the proscribed LTTE is planning to commemorate its deceased members, as directed by its leader Velupillai Prabhakaran on 27 November.

International Human Rights activists and lawyers say that the right to mourn is a basic right though not explicitly enshrined.

"The right to mourn is universal; you cannot prevent mothers and fathers from mourning their children even if they are LTTE cadre" Yasmin Sooka the International Truth and Justice Project's executive has said. "This is criminalising Tamils even beyond death; it's utterly absurd and more so in a country that talks all the time about reconciliation."

The end of the over three-decade old civil war saw thousands of people dead according to the UN and other international agencies who were evicted from the war zone by the current President Gotabaya Rajapaksa who was the defence secretary during the final phase of the war.

Questions have been raised in the social media about what they call the 'double standards' of the Rajapaksa government who on one hand speak about national reconciliation and on the other hand even banning a basic right to mourn the near and dear who were killed in the war.

As Sri Lanka's Military continue to increase its surveillance in the Tamil dominated North and East of the country, the Tamils who suffered immensely and living under constant fear and threat say year after year their lives are thrown out of gear in the month of November.




Meanwhile various courts in Sri Lanka have given contradictory decisions as the police and the hard-line government tried to stifle the genuine aspirations of the war affected Tamils to mourn their near and dear.

While the Police went from town to town seeking blanket restraining orders on individuals, institutions, political parties et al, many local courts have dismissed the plea of the police seeking such an order to restrain people from remembering their kith and kin by lighting a lamp.

According to the attorneys of the petitioners the Chavakacheri judge Mr. Judson in his order observed, "Most of the persons against whom the order is sought are either present or past lawmakers who sit in the highest law-making body of the nation-the Parliament and they know what the law is clearly. Hence seeking a restraining order anticipating they will violate it can't be issued".

However, the judge said if any individual against whom such an order is sought or others who violate the law of the land they could be arrested and brought before the court.

Police told the court the named persons against whom the order is sought are planning to commemorate the cadres of the LTTE which is a banned organisation which is an offence, and such gathering will contribute to the spread of the Covid-19 infection. This contention was not accepted by the court.

While courts in Mullaitivu, Batticaloa and Mannar had issued restraining orders as sought by the Police to ban the annual event to mourn those who lost their lives in the civil war, the local courts in Chavakacheri, Mallakam, Point Pedro, Kayts have denied the order sought by the police. It's expected that individuals against whom such a restraining order is sought will cite the judgement of these two courts and seek relief from the other courts as such, as the views of the other side has not been heard in court.

Local journalists say already stay orders have been obtained against more than 100 individuals, the list could increase as the event on 27 November approach.

Social media posts which have gone viral show very high security presence in areas like Mullaitivu the place of the final battle and where thousands of people were dead and have gone missing after being either handed over, surrendered, or captured by the security forces.

After all, to mourn the dead is to be human. And the right to mourn is undeniable and preservation of memory should be a substantive right.

Allowing the victims' family to mourn their dead may open a small window of confidence and a first step that the dream of reconciliation and accountability may become a reality.

**KALAIKOVIL**

**Academy of Fine Arts – Canada**

(The First Authorized Local Training Centre For Annamalai University – Canada Campus)
11, Bethany Street, Markham – Ont. L3S 4T9, Canada
Reg. No. 002159981

Phone: (416) 292-2425 Toll Free: 1 (877) 513-2425 Fax: (647) 799-1024

**ஓவிய, மற்றும் சிற்ப பாடங்களுக்கான ஆசிரியர் தேவை**

எமது கல்லூரியின் மார்க்கம் வளாகத்தில் தமிழ் கலாச்சாரம் சார்ந்த ஓவியம், மற்றும் சிற்ப வேலை ஆகிய பாடங்களைக் கற்பிக்கவல்ல தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகமைகள் :-

1. குறிப்பிட்ட துறையில் பட்டதாரியாகவோ அல்லது, அரச அங்கீகாரமுள்ள ஏதேனும் தகமை உடையவராகவோ இருத்தல் வேண்டும்.
2. குறைந்த பட்சம் 5 வருடங்களேனும் துறைசார் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
3. தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்பிக்கவல்லவராக இருத்தல் வேண்டும்.
4. தகமை உடையவர்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 20ம் திகதிக்கு முன்னராக கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :- (416) 292-2425. Ext. 205**



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான புதிய வர்த்தமானி அறிவிப்பு

ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான புதிய வழிகாட்டுதல்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அனுமதிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் ஜனாதிபதி செயலாளர் பீ.பி ஜயசுந்தரவினால் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இனிமேல் ஜனாதிபதி சட்டத்தரணியை நியமிக்கும் போது குறித்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை: 14 பேர் மரணங்கள், ஒருவரை காணவில்லை





இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்களில் 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒரு இலட்சம் குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, 22 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவரை காணவில்லை. 452 வீடுகள் பகுதியளவிலும் 56 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. 30 குடும்பங்களைச் சேர்ந்த 114 பேர் ஆறு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளத்தில் 7 பேரும், அம்பாந்தோட்டையில் ஒருவரும் மற்றும் திருகோணமலையில் 6 பேரும் மேற்படி உயிரிழந்துள்ளனர்.

# இலங்கை முல்லைத்தீவு மன்னாகண்டல் பகுதியில் யானை தாக்கி ஒருவர் பலி!



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு 09 மணியளவில் வீட்டிலிருந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற குறித்த நபர் திரும்பி வராத நிலையில் இவரைத் தேடி அதிகாலை 2 மணிக்கு உறவினர்கள் சென்றவேளை காட்டுபகுதியில் இறந்து கிடந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கெருடமடு. மன்னாகண்டலைச் சேர்ந்த 65 வயதுடைய அழகன் கோபால்ராஜ் என்பவர் என கூறப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையில் ஹோகந்தர பகுதியில் சமையல் எரிவாயு வெடிப்பு — வீட்டிற்கு பலத்த சேதம்

ஹோகந்தர பகுதியில் உள்ள வீட்டில் வியாழக்கிழமை காலை சமையல் எரிவாயு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

குறித்த வெடிப்பு சம்பவத்தின் போது வீட்டில் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதோடு குறித்த வீட்டின் சமையலறையில் பலத்த சேதம் ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையில் கடந்த சில நாட்களாக பல இடங்களில் தொடர்ந்தும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகின்ற நிலையில் பொது மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.





# அச்சுறுத்தப்படும் உறவுகளைத் தேடும் உறவுகள்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

இலங்கையில் போர் முடிந்து 12 ஆண்டுகள் ஆன பிறகும் போர்க் காலத்திலும் அதற்கு பின்னரான காலப்பகுதியில் காணாமல் போனவர்களுக்கு என்னவாயிற்று என்று இற்றைவரை யாருக்கும் தெரியவில்லை.

இந்நிலையில் அவர்களை தேடி அலையும் உறவுகளுக்கு அரசு நேரடியான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்க தலைவி மரியசுரேன் ஈஸ்வரி கூறுகிறார்.

அதேவேளை அரசால் அமைக்கப்பட்டுள்ள காணாமல் போனோர்களுக்கான அலுவலகச் செயற்பாடுகளுக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் முல்லைத்தீவில் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அதில் மரியசுரேன் ஈஸ்வரி வெளியிட்ட தகவல்கள்:

* 1718 ஆவது நாளாக நாங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இந்த நேரத்திலே நாங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் சர்வதேசத்துக்கும் அவசரமும் அவசியமானதுமான ஒரு தகவலை தெரிவிக்கவே இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்தோம். காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அதாவது ஓ எம் பி அலுவலகத்தால் நாங்கள் ஏற்றுக்கொள்ளாத அலுவலகம் எங்களை பதிவு செய்ததாக கூறி அதாவது காணாமல் போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் தகவல் அடிப்படையில் தங்களுக்கு மிகுதி தகவல்களையும் வழங்குமாறு மக்களுக்கு கடிதங்கள் அனுப்பிவருகின்றனர்.

* தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்திலே கடிதங்கள் வந்து கொண்டிருக்கிறது.நாங்கள் இந்த ஓ எம் பி அலுவலகத்திலே எந்த ஒரு தகவலையும் பதிவு செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு இது ஒரு பொய்யான தகவலாக வைத்துக்கொண்டு மக்களிடம் இருந்து தகவலை ஏற்று எமக்கான மரணச்சான்றிதழ் இழப்பீடுகளை வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் செய்வதற்கு முனைகின்றனர்.

* நாங்கள் இந்த முறைப்பாடுகளை செய்யவில்லை என்பது உங்களுக்கு தெளிவாக தெரிகின்ற காரணத்தினால் அவர்கள் எங்களுக்கு மரணச்சான்றிதழ்களை வழங்குவதற்காக எமது பதிவுகளை அவர்கள் ஏற்றுக்கொண்டதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

* ஓ எம் பி அலுவலகத்திடம் நாங்கள் பலதடவைகள் கூறினோம் இந்த அலுவலகம் எங்களுக்கு தேவையில்லை நீங்கள் எந்த பதிவுகளையும் செய்ய வேண்டாம் என்று இருப்பினும் அவர்கள் காணாமல் போனவருடைய புகைப்படம் காணாமல் போனவருடைய அடையாள அட்டை காணாமல் போனவருடைய பிறப்பு சான்றிதழ் உள்ளிட்ட சகல தகவல்களையும் கோருகின்றனர்.

* எமக்கு இந்த ஓ எம் பி அலுவலகம் தேவையில்லை ஜனாதிபதி ஏற்கனவே கூறியிருக்கிறார் காணாமல் போனோருக்கு தான் மரணச்சான்றிதழ் வழங்க தயாராகவுள்ளதாக சர்வதேசத்திலே கூறியுள்ள இந்த நிலையில் அதை சந்தர்ப்பமாக வைத்து ஓ எம் பி அலுவலகம் பாதிக்கப்பட்ட எம்மிடமிருந்து தகவலை பெற்று எமக்கு மரணச்சான்றிதழ் தருவதற்கு முனைகின்றார்கள் இதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

* காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது, அவர்களை எங்களிடம் கையளியுங்கள், எங்கள் உயிர்களை தான் நாங்கள் கோருகின்றோம். எங்கள் உயிர்களை தர விரும்பினால் யாரும் தொடர்பு கொள்ளலாம் அவ்வாறில்லையெனில் யாரும் எங்களது உறவுகளிடம் தொடர்புகொண்டு தகவல்களை பெற வேண்டாம் இலங்கையில் எமக்கான தீர்வு கிடைக்காது ஆகவே யாரும் எமது பதிவுகளை பெற முனைய வேண்டாம்.

# எல்லோரையும் ஒன்றிணைக்கிற வழிகளை நீங்கள் செய்ய வேண்டும் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோள்!

**- முன்னாள் போராளி**

வணக்கம் அன்பான உறவுகளே! இரண்டு நாட்களுக்கு முன்னர் சுமந்திரன் ஏற்படுத்திய மக்கள் சந்திப்பில் - அந்த சிறு கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பநிலை உண்மையிலே அந்த குழப்ப நிலை சம்பந்தமாக பலருக்கு உடன்பாடில்லை. இன்றைக்கு புலம்பெயர் தேசத்திலே உள்ள தமிழர்கள் சுமந்திரனை ஓடோட விரட்டினார்கள் என்ற பதிவுகளைப் பலர் பதிந்து கொண்டிருக்கிறார்களே ஒழிய உண்மையிலேயே அந்தக் குழப்ப நிலையில் பலருக்கு உடன்பாடில்லை. ஆனால் அது தவறு என்றெழுதுவதற்குப் பலபேருக்கு விருப்பமில்லை. விருப்பமில்லை என்பதற்கான காரணம் என்னவென்றால் சுமந்திரனுக்கு ஆதரவாக அந்தப் பதிவைப் போட்டால் தேசத்துரோகி, காட்டிக் கொடுக்கிறவன் என இப்படியான பதிவுகளை பலர் விமரிசனம் செய்வார்கள் என்ற பயத்திலேயே அது தவறு என்று பதிவு செய்வதற்குப் பலருக்கு மனநிலை இல்லாத நிலையில் இன்றைக்கு இருக்கினம்.

ஆனால் அது உண்மையிலேயே நடந்த அந்தச் சம்பவம் மிகவும் கேவலமானதொன்று. சுமந்திரனுக்கு எதிராக அவர்கள் பாவித்த வார்த்தைகள், வெளியிலே புலிக்கொடியோடு நின்று கொண்டு ஒரு பெண்மணி சுமந்திரன் கூட்டிக் கொடுத்தவன் அப்படியான தவறான வார்த்தைகள், தூசணங்கள், கள்ளன், திருடன் இப்படியான வார்த்தைகள். உண்மையிலேயே ஒரு விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் இன்றைக்கு இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல் தலைவர்கள் உண்மையில் எங்களுடைய மக்களிடத்தில் பற்று இருக்கிறதென்றால் மக்கள் வாக்களித்து தங்களுடைய தலைவர்களாக தெரிவு செய்தவர்கள்தான் அவர்கள். எங்கள் மக்கள் மீது பற்றிருக்குமே ஆனால் அவர்கள் மீது கருத்து வேறுபாடு இருந்தாலும் ஒரு மரியாதை ஒன்றிருக்க வேண்டும்.

முதல்லே எமது இனத்துக்கு ஆன பண்பு ஒன்று இருக்கிறது. எப்படி ஒருவரோடு பேசுவதென்ற பண்பு இருக்கிறது. அந்த மரியாதை கண்டிப்பாக இருக்க வேண்டும். அந்த இடத்திலே நடந்த ஒரு விடயம் உண்மையிலே மிகவும் மனக் கசப்பான சம்பவமாகவே பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களை பார்த்தீர்கள் என்றால் புலிக் கொடியோடுதான், வெளியிலே புலிக்கொடியோடு நின்றவர்கள்தான் அந்த எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். மற்றது இந்தப் புலிகொடி என்பது புனிதமான இந்தத் தமிழ் மக்களுக்காக பல வலிகளைச் சுமந்த கொடி அது. அந்தக் கொடியை எல்லாரும் தூக்கி வைத்துக் கொண்டு யாரும் எதையும் செய்யலாம் என்று ஒரு கருத்தைச் சொல்வதற்கு இன்றைக்கு ஒரு தயக்க நிலையில்தான் மற்ற ஆட்கள் இருக்கினம். அந்தக் கொடிக்கு ஒரு மரியாதை இருக்கிறது. அந்தக் கொடியில்லாமல் உங்களுடைய தனிப்பட்ட கருத்தை உங்களது விருப்பத்தை சொல்வதாக இருந்தால் கண்டிப்பாக அதற்கு நிறைய எதிர்ப்பு வரும். புலிக்கொடியோடு நிற்பதால் அதற்கு தங்கள் எதிர்ப்பை சொல்ல முடியாமல் இருக்கிறது.

மற்றது இந்தப் புலம்பெயர் தேசத்தில் இருக்கக் கூடிய பிரச்சனை என்னவென்று சொன்னால் இங்கே இருந்து கொஞ்சக் காசை அனுப்பிப் போட்டு தாங்கள் சொன்னபடி, அங்குள்ள அரசியல்வாதிகள் மட்டுமல்ல அங்கிருக்கிற எல்லாரும் - அரசியல்வாதிகள் மட்டுமல்ல பள்ளிக்கூட அதிபர்களில் இருந்து சகலரும், கிராம சேவகர் (ஜி.எஸ்) எனச் எல்லாருமே தங்களுடைய சொல்லின்படி நடக்க வேண்டும் என்ற மனநோய் ஒன்று இந்த வெளிநாட்டில் இருக்கிறவர்களுக்கு இருக்கு. இந்த மனநோயில் இருந்து இந்த வெளிநாட்டுக்காரர்கள் விடுபட வேண்டும். நாங்கள் சொல்கிறபடிதான் நீங்கள் நடக்க வேண்டும் என்று.

உண்மையில் வெளிநாட்டிலிருந்து கொண்டு இன்றைக்கு இந்தப் புலிக் கொடியையோடு போராட்டம் செய்தவர்கள் வந்து இந்த மாவீரர்களுக்கும் - உண்மையிலே நாட்டுக்காக தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு செய்யக்கூடிய மிகப் பெரிய துரோகம்தான் இப்படியான தவறான வழியில் கொண்டு போவது. இங்க இருக்கக் கூடிய உண்மையிலே அந்த வி.புலிகளுக்கு ஆதரவாக இங்கு செயல்படக் கூடியவர்கள் இதனை நீங்கள் வலிமையாகக் கண்டிக்க வேண்டும். கண்டிக்காத பட்சத்தில் நீங்கள்தான் இத்தகைய வன்முறைகளை தூண்டிவிடக் கூடியவர்களாக இருக்கிறீர்களோ என்ற எண்ணம் வர இடமிருக்கிறது.

இங்கே இருக்கிற நீங்கள் சொல்கிறபடிதான் அவர்கள் அரசியல் நடக்க வேண்டும் என்றால் இலங்கையில் நடைபெற வேண்டும் என்றால் நீங்கள் இங்கிருந்து கொண்டு - இப்பத்தான் சனநாயகமுறையில் உங்கள் சார்பாக ஒருவரை நிறுத்துங்கள். நாங்கள்தான் நிறுத்தியிருக்கிறோம் என்று மக்களிடம் பிரசாரம் செய்யுங்கள். அவர் வென்றுவாராரா மக்கள் ஆதரிகிறார்களா என்று பரருங்கள். நாட்டிலே உள்ளவர்கள் ஆதரிக்கிறார்களா என்று பாருங்கள். இல்லை நீங்கள் மக்கள் மீது பற்று நாட்டின் மீது பற்றுள்ள காரணத்தினால்தான் இப்படியான போராட்டங்களை இப்படியான வார்த்தைகளை பயன்படுத்துவதாக இருந்தால் - நீங்கள் இங்கிருந்து கொண்டு உழைக்கக் கூடிய வசதிகள் இருக்கு உங்கள் பிள்ளைகள் எல்லாரையும் சொந்த நாட்டுக்கு அனுப்புங்கள். சொந்த நாட்டுக்கு அனுப்பிப்போட்டு அங்கை வைத்துப் படிப்பியுங்கள். இங்கு இருந்து உழைக்கும் காசுகளை அங்கை அனுப்புங்கள். அப்படிச் செய்தால் ஆவது ஓரளவு யோசிக்கலாம் - நாட்டுப் பற்றினால்தான் நீங்கள் செய்கிறீர்கள் என்று.

இப்படி எதுவுமே செய்ய முடியாத நீங்கள் இப்படி தவறான வேலைகளைச் செய்வது பலருக்கு மன வேதனையை ஏற்படுத்தக் கூடிய நிலைமையாக இருக்கும். இன்றைக்கு சுமந்திரனின் அமெரிக்க வருகை அதன் பிறகு கனடா அவரைப்பற்றிய கன விமர்சனங்கள் இருக்கு. அதெல்லாவற்றையும் விடுவம். ஆனால் எங்களுடைய மக்கள் வாக்களித்து தெரிவு செய்தவர்கள். அவர்கள் விடக்கூடிய தவறுகள் என்ன? அவர்கள் என்ன செய்ய வேண்டும்? எப்படியான விடயங்களைச் செய்யலாம் என்று ஒரு மேசையில் இருந்து நீங்கள் கதைக்கலாம் வடிவா. ஆனால் உங்களுக்கு அப்படியான எண்ணம் வரவில்லை என்றால் நீங்கள்தான் ஏதோ குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள் இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல் தலைவர்களும் புலம்பெயர் தேசத்திலுள்ள மக்களும் ஒன்றிணையக் கூடாது என்பதை இந்தப் போராட்டங்களுக்குப் பின்னால் இருக்கும் யாரோ ஒருவர் மிகத் தெளிவாக் இருக்கிறார் என்பதை இப்படியான சம்பவங்கள் காட்டுகின்றன.

உண்மையில் அங்கிருக்கிற மக்கள் மீதும் அந்த நாட்டின் மீதும் பற்றிருந்தால் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? இப்படியான சந்திப்புக்களில் வந்து அவர்கள் விடக் கூடிய தவறுகளை சுட்டிக் காட்டி இன்ன தவறுகளை விடாதீர்கள் என்று சொல்ல வேண்டும்.

மற்றது வந்து ஒரு விடயத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கையில் இருக்கக் கூடிய அரசியல்வாதிகளுக்கு - எங்களுடைய அரசியல் வாதிகளுக்கு என்ன அதிகாரங்கள் இருக்கிறதென்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அண்மையில் மதிப்புக்குரிய அண்ணன் சிறிதரன் அவர்களை ஒரு பொலீஸ் அதிகாரி தள்ளிவிடக் கூடியதை வீடியோ பதிவுகளில் பார்க்கக் கூடியதாக இருந்தது. அப்ப எங்களுடைய பிரதிநிதிகளுக்க இருக்கக் கூடிய அதிகாரங்கள் என்னவென்பதை இப்படியான சம்பவங்கள் காட்டுகின்றன. இதை வைச்சுத்தான் அவர்களால் எதைச் செய்ய முடியும் எதைச் செய்ய முடியாது என்றதை நாங்கள் யோசிக்க வேண்டும். எங்கடை எண்ணப்படி புலம்பெயர்ந்த நாடுகளில் இருப்பவர்கள் அவர்கள் எங்கள் எண்ணப்படிதான் அவர்கள் நடக்க வேண்டும் வேண்டும் என்று எல்லாம் நினைப்பது மிகவும் முட்டாள்த்தனமான செயல்.

தயவு செய்து இனிமேல் இப்படியான செயல்களை விட்டு எல்லோரையும் ஒன்றிணைக்கிற வழிகளை நீங்கள் செய்ய வேண்டும் என்பதுதான் ஒரு தாழ்மையான வேண்டுகோளாக இருக்கிறது.

உங்களுடைய கருத்தென்ன உங்களுடைய செயல் என்ன என வெளிப்படையாக சொல்லி அவர்களோடு பேசி ஒரு ஒற்றமையான வழிகளை செய்ய வேண்டுமேயொழிய இப்படி கேவலமான வார்த்தைகள் - வெளியிலே நின்று கூட்டிக் கொடுத்தான் என்ற கேவலமான வார்த்தைகளை கேவலமான செயல்களை தயவு செய்து செய்யாதீர்கள். நீங்கள் அப்படிச் செய்தால் ..........2009 ஆம் ஆண்டுக்கு முன்னால் புலிக்கொடியைப் பிடித்துக் கொண்டு கடைசிவரை நீங்கள் இப்படி செய்திருக்க முடியாது.

2009 க்குப் பிறகுதான் நீங்கள் அந்தக் கொடியை வைத்து இப்படியான தவறான வழிக்கெல்லாம் பயன்படுத்துகிறீர்கள். உண்மையில் இது வேதனைக்குரிய விடயம் கண்டிக்கத்தக்க விடயம். இந்தக் கொடியை தேவையில்லாமல் வைத்துக் கொண்டு அசிங்கமான வார்த்தைகள், கெட்ட வார்த்தைகள், தூசண வார்த்தைகள் பேசிக்கொண்டு அந்தக் கொடியை கையிலே தூக்கிக் கொண்டு திரிவது மிகவும் கேவலமான ஒரு விடயம். தயவு செய்து இப்படிச் செய்யாதீர்கள். நன்றி. வணக்கம்.

*(எழுத்துருவம் - கனடா நக்கீரன்)*


TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization

www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வழிபாடும்.

வணக்கம்.

அன்புடையீர்.

மாவீரர் மாதமான கார்த்திகை மாதத்தை முன்னிட்டு, மாவீரர் வாரத் தொடக்க நாளான கார்த்திகை 21.11.21 முதல் 27.11.21 வரை தமது மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று, ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளையும், பூசை வழிபாடுகளையும் மேற்கொள்ளுமாறு, கனடா வாழ் ஈழத் தமிழ் மக்களைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் கேட்டுக் கொள்கின்றது.

மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தமது இளைய இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களுக்காகவும். ஈழ விடுதலைப் போரில் மரணமடைந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகவும், தாயகத்தில் இன்றுவரை துயர் சுமந்து வாழும் எமது உறவுகளின் நல்வாழ்வுக்காகவும், ஆலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யுமாறு அனைத்துத் தமிழ் மக்களையும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் கேட்டுக் கொள்கின்றது.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619.
CTRO@tamilremembrance.com

# தமிழ் கட்சிகளிடம் வெளியுறவுக்கொள்கை உண்டா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி முன்வைக்க வேண்டும் என்று டெலோ இயக்கம் ஒரு முயற்சியை முன்னெடுத்து வருகிறது. இம்முயற்சியில் மூன்று தமிழ் தேசியக் கட்சிகளோடு முஸ்லிம் கொங்ரஸையும் மனோ கணேசனின் கட்சியையும் ஒருங்கிணைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மிகப் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியை ஒருங்கிணைக்க முடியவில்லை.

மேற்கண்ட முயற்சிகள் தொடக்கப்பட்டபின் கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் சம்பந்தரை இரண்டு தடவைகள் சந்தித்தது. டெலோ இயக்கத்தின் மேற்கண்ட முயற்சியை நோக்கி தமிழரசுக் கட்சியை ஊக்கப்படுத்துவது மேற்படி சந்திப்புகளில் உள்நோக்கம் என்று கருதப்படுகிறது. ஆனால் தமிழரசுக் கட்சி இன்றுவரையிலும் அதற்கு சாதகமாக பதில்வினையாற்றவில்லை.

மாறாக சுமந்திரன் தலைமையிலான ஒரு சட்டவாளர் குழு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று அவர்கள் சென்றதாக சம்பந்தரும் சுமந்திரனும் கூறுகிறார்கள். ஆனால் அக்குழுவில் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல அப்படி ஒரு குழுவை அனுப்ப இருப்பதாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு தெரியாது. எனவே அக்குழுவை கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ குழுவென்றோ அல்லது தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ குழுவென்றோ கூறுவது பொருத்தமாக இருக்குமா? அல்லது பங்காளிக் கட்சிகளின் நகர்வை மேவியோடும் ஒரு முயற்சியா அது?

இப்படி ஒரு குழு அமெரிக்காவுக்கு விஜயம் செய்து எதை சாதிக்கப் போகிறது? சம்பந்தரும் சுமந்திரனும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கூறுகிறார்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தின் மீது அமெரிக்காவின் அழுத்தத்தை பிரயோகிக்க வைப்பதே அக்குழுவின் நோக்கம் என்று. இலங்கை அரசாங்கம் ஒரு புதிய யாப்பை கொண்டுவர இருப்பதாக கூறி வருகிறது. அப்படி உருவாக்கினால் அதில் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்க வேண்டும். தீர்வு தமிழ் மக்களுக்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு அமெரிக்காவின் அழுத்தம் அவசியம் என்று சம்பந்தரும் சுமந்திரனும் நம்புகிறார்களா? ஆயின் அது சரிதான்.

இது விடயத்தில் இனப்பிரச்சினையின் பல தசாப்த கால அனுபவத்தை தொகுத்துப் பார்த்தால் அது தெளிவாக தெரியும். ஒரு மூன்றாவது தரப்பின் தலையீடு இன்றி இனப்பிரச்சினைக்கான தீர்வை காண முடியாது. சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதமானது ஒரு வெளித் தரப்பின் அழுத்தம் இல்லாமல் இறங்கி வராது. இது கடந்த பல தசாப்த கால இலங்கைத் தீவின் வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட ஒரு பேருண்மை. இலங்கைத் தீவின் இனப் பிரச்சினை தொடர்பில் இதுவரை எழுதப்பட்ட எல்லா உடன்படிக்கைகளிலும் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நீடித்து இருந்தவை மூன்று உடன்படிக்கைகள். முதலாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை. இரண்டாவது ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை. மூன்றாவது நிலைமாறுகால நீதிக்கான ஐநா தீர்மானம்.

இம்மூன்று உடன்படிக்கைகளின் போதும் மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் இருந்தது. இந்திய-இலங்கை உடன்படிக்கையை அமல்படுத்த இந்திய அமைதி காக்கும் படை இறங்கியது. ரணில்-பிரபாகரன் உடன்படிக்கையின் போது ஸ்கண்டிநேவிய யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்கள் இறங்கினார்கள். ஐநா தீர்மானத்தின் பின் இலங்கைத்தீவை கருக்குழு நாடுகளும் ஐநாவின் சிறப்புத் தூதுவர்களும் தொடர்ச்சியாகப் பின் தொடர்ந்தார்கள். எனவே ஒரு மூன்றாவது தரப்பின் மத்தியஸ்தம் இன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடையாது. இப்பொழுது கேள்வி யார் அந்த மூன்றாவது தரப்பு? என்பதுதான்.

மேற்கண்ட மூன்று தீர்வு முயற்சிகளின் போதும் இரண்டு தரப்புகள் மத்தியஸ்தம் வகித்தன. இந்திய-இலங்கை உடன்படிக்கையில் இந்தியா. பின் வந்த இரண்டு ஏற்பாடுகளிலும் மேற்கு நாடுகள். 2000 ஆண்டு விடுதலைப் புலிகளின் காலத்திலிருந்து தொடங்கி இன்று வரையிலுமான கடந்த 21 ஆண்டுகளில் மேற்கு நாடுகளே ஒன்றில் அனுசரணை புரிகின்றன அல்லது மத்தியஸ்தம் வகிக்கின்றன.

இதில் முதலாவது கட்டம் 2009 வரையிலுமானது. மேற்கு நாடுகள் மற்றும் ஜப்பானின் பின்பலத்தோடு முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளின் போது நோர்வே சமாதானத்துக்கான அனுசரணையாளராக செயற்பட்டது. அந்நாட்டின் விசேஷ தூதுவரான சொல்ஹெய்ம் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான எல்லா விடயங்களையும் இந்தியாவுக்கு தொடர்ச்சியாக அப்டேட் செய்து வந்தார். இது முதலாம் கட்டம்.

இரண்டாம் கட்டம் 2009க்குப் பின்னரான ஜெனிவா மைய அரசியல். அதன் ஒரு கட்ட விளைவே 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் ஆகும். அது நிலைமாறுகால நீதியை ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வாக பரிந்துரைக்கின்றது. ஆனால், இலங்கைத்தீவுக்கான நிலைமாறுகால நீதியின் பெற்றோரில் ஒருவரான மைத்திரிபால சிறிசேன 2018ஆம் ஆண்டு யாப்புச் சதி. ஒன்றின் மூலம் நிலைமாறுகால நீதியை அனாதையாக்கினார். எனினும் ஜெனிவா மைய அரசியல் அதோடு முடிவுக்கு வரவில்லை ஐநா தீர்மானங்களில் இந்தியா 13வது திருத்தத்தை ஒரு தீர்வாக உட்புகுத்திவிட்டது. அதாவது இந்தியா ஐநா மைய மத்தியஸ்த முயற்சிகளில் 13வது திருத்தத்தை ஒரு தீர்வாக உட்செலுத்தி விட்டது என்று பொருள்.

எனவே 2000 ஆண்டிலிருந்து தொடங்கி மேற்கு மைய சமாதான முயற்சிகள் எல்லாவற்றிலும் இந்தியா நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்தி வருகிகிறது. அதுதான் இலங்கை இனப்பிரச்சினையின் புவிசார் அரசியல் யதார்த்தமாகும். இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச் சக்தியும் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தர முற்படாது என்பதுதான் கடந்த 20 ஆண்டுகால மேற்கு மைய மத்தியஸ்த முயற்சிகளின் மூலம் கற்றுக்கொள்ளப்பட்ட பாடம் ஆகும். தமிழ் மக்கள் இந்த புவிசார் அரசியல் யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு இந்தியாவின் பிராந்திய நலன்களும் ஈழத்தமிழர்களின் நலன்களும் ஒன்றை ஒன்று வெட்டும் பொதுப் புள்ளிகளை வைத்து பேரத்தை பேசவேண்டும்.

அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரு பொதுவான வெளியுறவு அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக ஓடக்கூடாது. குறுக்கோட்டமும் கூடாது. அவ்வாறு பொதுவான ஒரு வெளியுறவு அணுகுமுறைக்கு ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை அவசியம். ஒரு பொதுவான வெளியுறவு கட்டமைப்பு அவசியம். அவ்வாறான பொருத்தமான வெளியுறவுக் கட்டமைப்பு இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் ஒரே கூட்டமைப்புக்குள் இரு வேறு ஓட்டங்கள் நிகழ்கின்றன. ஒரு ஒருபக்கம் ஐந்து கட்சிகள் இணைந்து 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியாவைக் கேட்க விளைகின்றன. அதாவது இந்தியாவை ஒரு கூட்டுக் கோரிக்கையின் மூலம் உள்ளே கொண்டு வர வேண்டும் என்று முயற்சிக்கின்றன. ஆனால் அம்முயற்சிகளை மேவியோட முற்படும் சம்பந்தரும் சுமந்திரனும் மேற்கு நாடுகளை கொண்டு இலங்கைத் தீவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க லாமா என்று சிந்திக்கிறார்கள்.

அமெரிக்க விஜயத்தின் பின் கனடாவில் உரை நிகழ்த்திய சுமந்திரன் அதைக் குறித்துப் பேசியுள்ளார் அமெரிக்க சந்திப்புகளின் பின் அங்கே என்ன பேசப்பட்டன என்பவற்றை வோஷிங்டனில் உள்ள இந்திய தூதுவருக்கும் நியூயோர்க்கில் உள்ள ஐநாவுக்கான இந்திய பிரதிநிதிக்கும் தான் எடுத்துரைத்ததாக சுமந்திரன் கனடாவில் வைத்து கூறியுள்ளார். நோர்வே சமாதானத்துக்கு அனுசரணை புரிந்த காலகட்டத்தில் சொல் ஹெய்ம் வன்னியில் என்ன பேசப்பட்டது என்பதை ஒவ்வொரு முறையும் இந்தியாவுக்கு அப்டேட் செய்ததும் சுமந்திரன் அமெரிக்க விஜயத்தில் பேசப்பட்டவற்றை இந்தியாவுக்கு அப்டேட் செய்வதும் ஒன்றல்ல. ஏனென்றால் சொல்ஹெய்ம் ஒரு அனுசரணையாளர், விஷேஷ தூதுவர். ஆனால் சுமந்திரன் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பின் பிரதிநிதி. அவர் தனது மக்களின் நோக்கு நிலையில் இருந்து ஒரு வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியவர். ஆனால் நடப்பு நிலைமைகளை உற்றுக் கவனித்தால் அப்படி ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை ஏதும் தமிழ் கட்சிகள் மத்தியில் கிடையாது. அதைவிட குறிப்பாக ஒரே கூட்டமைப்புக்குள்ளேயே இருவேறு ஓட்டங்கள். அவை ஒரு தேசமாக சிந்தித்து, வெளிவிவகார நோக்கு நிலையிலிருந்து தீர்மானிக்கப்பட்ட தந்திரோபாய ஓட்டங்கள் அல்ல. மாறாக நான் பெரிதா நீ பெரிதா என்ற அகந்தையின் பாற்பட்ட ஓட்டங்களாகவே தெரிகின்றன.

சீனா ஒரு பிராந்திய பேரரசு என்ற நிலையிலிருந்து பூகோளப் பேரரசு என்ற ஒரு வளர்ச்சியை நோக்கிப் போக முற்பட்டதன் பின்னணியில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றும் மற்றதில் தங்கியிருக்கும் பூகோளப் பங்காளிகளாக மாறிவிட்டன. சீனாவை எதிர்கொள்வதற்கு இப்பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு இந்தியா தேவை. அதேபோல உலக அளவில் இந்தியாவுக்கும் அமெரிக்கா தேவை என்ற நிலை உருவாகிவிட்டது. Covid-19 சூழலானது இத்துருவமயப்படலை அதிகப்படுத்தி இருக்கிறது. எனவே அமெரிக்காவை எப்படித்தான் கெட்டித்தனமாகக் கையாண்டாலும் இறுதியிலும் இறுதியாக அமெரிக்கா இந்தியாவிடந்தான் கொண்டு போய்விடும் என்பதுதான் இப்போதுள்ள புவிசார் அரசியல் யதார்த்தமாகும்.

ஆனால் இப்பூகோளப் பங்காளிகளை கூட்டமைப்பின் இரு வேறு தரப்புக்கள் தனித்தனியாக அணுகுவதே இங்கு வேடிக்கையான ஒரு விடயமாகும். ஒரு சிறிய தீவில் ஒரு சிறிய மக்கள் கூட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் ஒப்பட்டளவில் பெரிய ஒரு கட்சி, அதன் வெளிவிவகார அணுகுமுறையில் இரண்டாகப் பிரிந்து நிற்கிறதா? தமிழ்க்கட்சிகள் இறந்த காலத்திலிருந்து எதையுமே கற்றுக் கொள்ளப் போவதில்லையா?

**வீணாவின் கவிக்கணை**

உன் கையில் இருக்கும்
நாணயத்தைக் கொண்டு,
அடுத்தவர் நாணயத்தை
சீண்டிப்பார்க்காதே,
ஒரு நேரம்போலவே மறு
நேரமும் இருக்கப் போவதில்லை,
மேற்கே இறங்கிய சூரியன்
ஒரு போதும் உதிக்காமல்
இருக்கப்போவதுமில்லை,
அது போல் கிழக்கே உதிக்கும்
சூரியனும் மறையாமல்
இருக்கப்போவதுமில்லை
அவரவர் இலக்கை, அவர்ரவர்
நேரம் வருகையில் அடைவர்
என்பதை உணர்ந்தால் போதும்.

# தை பொங்கலுக்கு தேவையான 18 வகையான பொருட்கள் அடங்கிய பொங்கல் பொதி

★ PRE ★ ORDER NOW

- மஞ்சள்
- ஏலக்காய்
- Stainless Steel Paanai - 1
- Stainless Steel Plate - 1
- Stainless Steel Agappai - 1
- Ponni Raw Rice - 500 Grams
- Sugar Jaggery - 500 Grams
- Sugar Crystal - 200 Grams
- Cashew Nut - 30 Grams
- Dry Grapes - 30 Grams
- Pure Cow Ghee - 100 Grams
- பாசிப்பயிறு - 200 Grams
- கற்பூரம் - 1 பாக்கெட்
- விபூதி - 1 பாக்கெட்
- சந்தனம் 1 பாக்கெட்-
- குங்குமம் - 1 பாக்கெட்
- கப் சாம்பிராணி
- ஊதுபத்தி - 1 பாக்கெட்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...

Tasty தமிழா



இப்போது விற்பனையில்...
முன்பதிவிற்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

647 762 9512

ORDER NOW

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

**Joy Square Towns**
Coretridge

**Copperhill South Barrie**
Deer Creek Fine Homes

**Alba Condos**
Edenshaw Developments Limited

**Arte Condos**
EMBLEM

**Vincent Condos**
Rosehaven Homes Limited and Townwood Homes Inc.and Guglietti B...

**Adagio Condos**
Menkes Developments Ltd.

**Kensington District Towns**
Lynbury Homes

**Minu Towns**
Stateview Homes

**Exchange District Condos 3**
Camrost Felcorp

**WestLine Condos**
CentreCourt Developments Inc.

**U.C. Tower 2**
Tribute Communities and Riocan Real Estate Investment Trust

**Verge Condos**
Riocan Real Estate Investment Trust

**Gemma Condos**
Pinnacle International



## Bala Logendralingam
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**






Ayurveda, - Massage Therapy & Physiotherapy
Lady Doctor & Therapist

**You are in experts hand**

**Traditional Kerala Ayurveda Treatments**
- Shirodhara - Third Eye Treatment
- Abhyanga- Full Body Massage
- Kizhi
- Pizhichil
- Panchakarma
- Rejuvenation Theraphy
- Clinical Yoga Training

**we are specialized in**
- Pain Management
- Arthritis
- Spine & Joint
- Spondylitis
- Headache and Migraine
- Stress, Strain and Depression
- Ligament, tissue and sport injuries
- Skin Diseases

Weekend and Late Evening
Appointments available
All 7 days

Call us Today:
**905-279-9777**
Mobile:
**647-629-8841**
www.aayushwellnesscenter.ca

**We speak your language:**
**English, Malayalam, Tamil, Hindi**

**79 Dundas St. W, Suit 108, Mississauga, L5B 1H7**

**Dr. K.C. Hareendran,** BAMS, PhD, DNM (CANADA
Ayurveda & Naturopath Physician
**Dr. Amrutha Rajeev** BAMS, MD (Ayurveda)

www.facebook.com/aayushwellnesscenter www.twitter.com/aayushwellnesscenter

தண்ணிதாழ்வு, கட்டுவனை விறப்பிடமாகவும், உரும்பிராயையும், இந்தியாவையும் வதிவிடமாகவும், கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் உயர்திரு சபேசன் செல்வராஜா அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 02-12-1975
உதிர்வு: 01-11-2021



அமரர் உயர்திரு
சபேசன் செல்வராஜா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
எங்களை வானுயர பெயர் துலங்க வைத்த அன்புத் தந்தையே
நீங்கள் இறைவனடி சேர்ந்து 31 நாள் ஓடி மறைந்தாலும்
எங்கள் உள்ளம் வேதனைத் தீயில் வெந்து துடிக்கிறது
நிஜத்தில் இன்று நீங்கள் எம்முடன் இல்லை - ஆனாலும்
எங்கள் மனம் ஏற்க மறுக்கிறது காணும்
பக்க மெல்லாம் கண் முன்னே நிற்கின்றீகள்
கணவனாய், அப்பாவாய், மகனாய், அண்ணணாய், மைத்துனராய்
உடன் பிறவா, சகோதரனாய், நண்பனாய் பாசமே வேதமாய்
எம்மை ஆட்கொண்டீர்கள் அப்பா - 31 நாள்
கடந்தாலும் உங்கள் பூத்த புன்னகை முகமும் புன் சிரிப்பும்
கண் முன்னே வந்து வாட்டுகிறது அப்பா, நிமிடத்திற்கு
ஒரு தரம், கலையா, காம்யித், அச்சம்மா கூப்பிடும்
சத்தம் கேட்கிறது நீங்கள் எப்படி அப்பா
போனீர்கள், நாங்கள் எப்படி அப்பா, ஆனந்தமாய்
வாழ்வது வேதனையில் துடிக்கின்றோம்... இறைவன்
எங்கள் கண் முன்னால் உங்களை வா என்று அழைத்தானோ
தெரியவில்லை, பெரியப்பா தான் அழைத்தரா தெரியவில்லை
நீங்கள் இறைவன் காலடியில் இருந்து எங்களை
வாழ வைக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறோம்...
உங்கள் ஆத்மா சாந்தியடையவும் பிராத்திக்கின்றோம்...

அன்பு மனைவி, பிள்ளைகள், அன்பு அப்பா, அம்மா,
தம்பி, பெறாமக்கள், மைத்துனர், மைத்துனி,
உடன் பிறவா சகோதரங்கள், நண்பர்கள்.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# கனடா உதயன் தமிழ் வார இதழ் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்காகப் படைக்கும் "நாவன்மை நிகழ்ச்சி 2021" - அரங்கம் 6 தலைப்பு - "இயற்கையைப் பாதுகாப்போம்"

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28ம் திகதியன்று நடைபெறுகின்றது. கனடா உதயன் தமிழ் வார இதழ் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்காகப் படைக்கும் "நாவன்மை நிகழ்ச்சி 2021" - அரங்கம் 6 தலைப்பு - இயற்கையைப் பாதுகாப்போம்.

இந்த நிகழ்ச்சி ஒரு மெய்நிகர் நிகழ்வாக ( சூம் நிகழ்வாக) நடைபெறுகின்றது. மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்படும் விளம்பரத்தைப் பார்க்கவும்.




# கனடா இஷானியா மதனதீபனின் இரண்டாவது பிறந்த நாளில் புதுக்குடியிருப்பில் முதியோர் கௌரவிப்பு, சிறுவர்களுக்கு பரிசளிப்பு மாணவர்களுக்கான மிதிவண்டி வழங்கல் சிறப்பாக இடம்பெற்றன




கனடாவின் மிசிசாகா நகர் வாழ் திரு.திருமதி. மதனதீபன்-நிரோஷா தம்பதியினரின் செல்வப் புதல்வி இஷானியாவின் 2வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் மண்ணின் புதுக்குடியிருப்பில் முதியோர்களுக்கான கௌரவிப்பு, சிறுவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் மாணவர்களுக்கான மிதிவண்டி வழங்கல் ஆகிய பயனுள்ள நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன.

கடந்த 19-10-2021 அன்று நடைபெற்ற மேற்படி அற்புதமான நிகழ்வில் அங்கு கலந்து கொண்ட முதியோர்கள் சிறுவர் சிறுமியர் மற்றும் மாணவ மாணவிகள் உட்பட அனைவரும் மிகவும் அன்புடன் உபசரிக்கப்பெற்று மகிழ்ச்சியுடன் கௌரவிக்கப்பெற்றன. சிறுவர் சிறுமியர்கள் மகிழ்ச்சியுடன் இல்லம் ஏகினர்.

படங்கள்: செந்தூரன் - வவுனியா











# கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று உறுதி; மருத்துவமனையில் தனிமைப்படுத்திக் கொண்டார்

சினிமா

மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பிய நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் நடிகர் கமல்ஹாசன், "ஹவுஸ் ஆப் கதர்" என்ற பெயரில் பிரத்யேக ஆடை பிராண்டை உருவாக்கியுள்ளார். கதர் ஆடைகளை மேற்கத்திய நாடுகளிலும் பிரபலமடையச் செய்வதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அண்மையில் கமல்ஹாசன் அமெரிக்கா சென்று திரும்பினார். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கமலுக்கு இருமல் இருந்து வந்தது.

இதனால் அவர் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டபோது, அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடிகர் கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில், குறிப்பிட்டுள்ளதாவது: "அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் லேசான இருமல் இருந்தது. பரிசோதனை செய்ததில் கோவிட் தொற்று உறுதியானது. மருத்துவமனையில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். இன்னமும் நோய்ப்பரவல் நீங்கவில்லையென்பதை உணர்ந்து அனைவரும் பாதுகாப்பாக இருங்கள்". இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் கொரோனா தடுப்பூசி 2 தவணையும் செலுத்திக்கொண்டபோதும் அவருக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் ஜெயசங்கரை சுடுவதற்காக துப்பாக்கியுடன் ஜெயலலிதாவின் பங்களாவிற்குச் சென்ற எம்.ஜி. ஆர்



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுடன் நடிகர் ஜெய்சங்கர் நெருங்கிப் பழகியதால் அவரை சுடுவதற்காக துப்பாக்கியுடன் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் பங்களாவுக்கு மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சென்றார் ஆனால் ஜெய்சங்கர் அங்கே அப்போது இல்லை என்று நடிகை குட்டி பத்மினி தெரிவித்திருக்கும் வீடியோ பதிவு சமூக வலைதளங்களில் வைரலாக ஷேர் செய்யப்பட்டு வருகிறது.

இந்த வீடியோ பதிவில் குட்டி பத்மினி கூறியிருப்பதாவது ராமண்ணான்னு ஒரு டைரக்டர். அவருடைய நீ படத்தில் ஜெயலலிதா அக்காவும் ஜெய்சங்கர் அங்கிளும் ஒன்னா ஆக்ட் பண்றாங்க.



ஜெயலலிதா அக்காவுக்கு யாராவது நல்லா இங்கிலீஷ் பேசுனா அவங்களை ரொம்பப் பிடிக்கும். ஜெய்சங்கர் அங்கிளும் நல்லா பேச இரண்டு பேருக்கும் இடையே நல்ல நட்பு உருவாகுது. அதற்கு அடுத்து யார் நீ படத்துலயும் தொடர்ந்து நடிக்கிறாங்க. அப்ப என்ன ஆகுதுன்னா இவங்க ரெண்டு பேருக்குள்ள ஒரு கெமிஸ்ட்ரி. ஸ்டுடியோவில் இருக்கும் போது எப்பவுமே ஒரு ஓரமாக ஒரு சேரில் கால்மேல் கால் போட்டுகிட்டு புத்தகம் வெச்சுகிட்டு யார் கூடயும் பேசாத அம்மு அக்கா (ஜெயலலிதா), ஜெய்சங்கர் அங்கிளோட மட்டும் அடிக்கடி கலகலன்னு பேசுறாங்க. சிரிச்சு சிரிச்சு பேசுறாங்க.. ரெண்டு பேரும் பழகுறதில ஒரு சந்தோம் தெரியுது.

இது எப்படியோ ஒரு கிசு கிசுவாக போய் புரட்சித் தலைவரோட (எம்.ஜி.ஆர்) காதுவரைக்கும் போயிடுது. அவ்வளவுதான் ஒருநாள் என்ன பண்றாருன்னா. ஒரு துப்பாக்கியை எடுத்துக்கிட்டு ஜெய்சங்கர் அங்கிள் ஜெயலலிதா அக்கா வீட்டில் இருக்கிறதா நினைச்சுகிட்டு சுட வந்தராரு. ஆனால் அந்த வீட்டுல நல்லவேளை அப்ப ஜெய்சங்கர் அங்கிள் இல்லை. இருந்திருந்தா ஜெய்சங்கர் அங்கிளை எம்.ஜி.ஆர். சுட்டிருந்தாலும் சுட்டிருப்பார். இவ்வாறு அந்த வீடியோவில் நடிகை குட்டி பத்மினி தெரிவித்துள்ளார். இருப்பினும் குட்டி பத்மினி இந்த தகவலை எப்போது பகிர்ந்து கொண்டார் என்பது உள்ளிட்ட விவரங்கள் அதில் இடம்பெறவில்லை? இந்த வீடியோதான் இப்போது சமூக வலைதளங்களில் வைரலாக ஷேர் செய்யப்பட்டு வருகிறது. இந்த வீடியோ தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.




# அந்தமான் அருகே 29ம் தேதி புதிய காற்றழுத்தம் உருவாகிறது: 3 நாட்களுக்கு மிக கனமழை வாய்ப்பு : தூத்துக்குடி உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்'

வங்கக் கடலில் நிலவும் காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு மிக கனமழை பெய்யும். தெற்கு அந்தமான் அருகே 29ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் நேற்று கூறியதாவது:தெற்கு வங்கக் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி அதே இடத்தில் நீடிக்கிறது.

இது, குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும் என்று கருதப்பட்டது. ஆனால், அதற்கு வாய்ப்பு இல்லை. 29ம் தேதி தெற்கு அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. அது, 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசையில் நகரக்கூடும்.தற்போது நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக 26ம் தேதி (இன்று) கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், மதுரை, புதுக்கோட்டை, தேனி, தூத்துக்குடி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக் கூடும்.

27ம் தேதி (நாளை) காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், சேலம், நீலகிரி, கோவை, ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன மழையும் பெய்யக்கூடும்.28ம் தேதி திருவள்ளூர், ராணிப்பேட்டை, நீலகிரி மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி, டெல்டா மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்யக்கூடும்.

அடுத்த 2 நாட்களுக்கு சென்னையில் ஒருசில இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.குமரிக்கடல், தென்மேற்கு வங்கக் கடல், தென் தமிழக கடலோர பகுதிகள், மாலத்தீவு, தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.இந்நிலையில், நேற்று மாலை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை ஆகிய 6 மாவட்டங்களில் அதிகனமழை பெய்யும் என்பதால் சிவப்பு எச்சரிக்கை (ரெட் அலர்ட்) விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

திருநெல்வேலி, தூத் துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி மிக கனமழை கொட்டியது.பல இடங்களில் இரவிலும் மழை நீடித்தது. திருச்செந்தூரில் 3 மணி நேரத்தில் 17 செ.மீ. மழை பதிவானது. இதன் காரணமாக திருச் செந்தூர் நகர் முழுவதும் வெள்ளக்காடாக மாறியது. செந்திலாண்டவர் கோயில் கிரிப்பிரகாரம், சண்முகவிலாசம், நாழிக்கிணறு செல்லும் பாதை உள்ளிட்ட பகுதிகளில் 2 அடி உயரத்துக்கு மழைநீர் தேங்கியது. 2ம் பிரகாரம் வரை மழைநீர் வழிந்தோடியதால் பக்தர்கள் அவதிப்பட்டனர்.

கடற்கரை பகுதியிலும் தண்ணீர் தேங்கி நின்றது.தூத்துக்குடி நகரமும் தொடர் மழையால் வெள்ளக்காடாக மாறியது. ரயில் நிலையத்தில் தண்டவாளங்கள் தண்ணீரில் மூழ்கின. மாவட்டத்தில் நேற்று காலை 8.30 முதல் மாலை 5.30 மணி வரை 25 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. சென்னையில் இருந்து பகல் 1.50 மணிக்கு தூத்துக்குடிக்கு வந்த விமானம் தரையிறங்க முடியாததால் திருச்சிக்கு திருப்பி அனுப்பப்பட்டது. அந்த விமானத்தில் தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு உள்ளிட்ட பயணிகள் இருந்தனர்.கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வார இடைவெளிக்கு பின், கடந்த 2 நாட்களாக லேசாக பெய்த மழை, நேற்று கனமழையாக கொட்டியது.

இதனால் திருப்பதிசாரம், தேரேகால் புதூர் உள்ளிட்ட பகுதிகளில் மீண்டும் வெள்ளம் புகுந்தது. பள்ளிகளுக்கு விடுமுறைகனமழை காரணமாக புதுக் கோட்டை, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, அரியலூர், திண்டுக் கல், தென்காசி, தேனி, பெரம்பலூர் ஆகிய 9 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. திருச்சி, திருவாரூர், ராமநாதபுரம், மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் பள்ளி களுக்கு மட்டும் விடுமுறை அறி விக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இதுவரை 6.74 கோடி பேர் தடுப்பூசி செலுத்தியுள்ளனர்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்



தமிழ்நாட்டில் இதுவரை 6 கோடியே 74 லட்சம் பேர் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டு இருப்பதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித் துள்ளார்.சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற 11வது மெகா தடுப்பூசி முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.

இது குறித்து இன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:"பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட, ராயபுரம் மண்டலம், வார்டு53, தங்கசாலை பேருந்து நிலையத்தில் நடைபெற்ற மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பார்வையிட்டார்.பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்ததாவது: "முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் படி, மாநிலம் முழுவதும் 11வது மெகா கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம் 50,000 இடங்களில் நடைபெற்று வருகிறது. சென்னையில் இன்று 2 லட்சம் நபர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,600 இடங்களில் நடைபெற்றுகிறது.

தமிழ்நாட்டில் இதுவரை 6 கோடியே 74 லட்சத்து 66 ஆயிரத்து 158 கோவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதில் 76.23% முதல் தவணை தடுப்பூசியும், 40.31% இரண்டாம் தவணை தடுப்பூசியும் செலுத்தி உள்ளனர். இந்த மெகா தடுப்பூசி முகாம்களில் இதுவரை 2வது மற்றும் முதல் தவணை தடுப்பூசி செலுத்தாதவர்களை கண்டறிந்து தடுப்பூசி செலுத்தும் பணி தீவிரப்பட்டுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் இதுவரை 72 லட்சம் பேர் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்த கால அவகாசம் முடிந்து காத்திருக்கின்றனர். மாநிலத்தில் 1 கோடியே 1 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது.உலக நாடுகளில் தடுப்பூசி குறைவாக செலுத்தப்பட்டுள்ள நாடுகளில் கொரோனா தொற்று பாதிப்பின் காரணமாக இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. எனவே, கோவிட் தடுப்பூசியின் அவசியத்தை உணர்ந்து தடுப்பூசியினை செலுத்திக்கொள்ள வேண்டும்.முதல்வர் கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணியினை ஒரு இயக்கமாகவே செயல்படுத்தி வருகிறார். இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக முதன்முதலில் வீடுகளை தேடிச்சென்று தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், வாரந்தோறும் மெகா தடுப்பூசி முகாம்கள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணி தாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு தனி கவனம் செலுத்தி அவர்களின் இல்லங்களுக்கே சென்று தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் வீடு தேடி தடுப்பூசி திட்டத்தின் மூலம் இதுவரை 1.27 லட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அரசின் சார்பில் பொதுமக்களை பாதுகாக்கும் வகையில், அனைத்து நிலைகளிலும் கோவிட் தடுப்பூசி செலுத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பொதுமக்கள் அலட்சியமாக இல்லாமல் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்.மேலும், சமீபத்தில் NIE என்கின்ற தேசிய நிறுவனம் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி சென்னையில் குடிசை பகுதிகளில் வசிக்கும் மக்கள் 32%, நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதிகளில் 35% தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர் என தெரியவந்துள்ளது. இதேபோன்று குடிசைப் பகுதிகளில் 21% மக்கள் மட்டுமே முக கவசம் அணிகின்றனர்.

சென்னையில் உள்ள மால்களில் 51% பேர் முக கவசம் அணிகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. எனவே, பொதுமக்கள் முகக்கவசம் அணிதல் மற்றும் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்வதை 100% உறுதி செய்ய வேண்டும்." இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்தார்.இந்த ஆய்வின்போது ராயபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்."இவ்வாறு தமிழக அரசு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# யாழ்.உதயன் நாளிதழ் ஆசிரியர் கானமயில்நாதன் காலமானார்; அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றியவர்

இலங்கையில் ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றிய உதயன் நாளிதழின் ஆசிரியர் கானமயில்நாதன் காலமானார். அவருக்கு வயது 79.இலங்கையில் உள்ள யாழ்ப்பாணம் மாவட்டம் வட்டுக்கோட்டையில் 25.07.1942ல் பிறந்தவர் ம.வ.கானமயில்நாதன். தொடக்கத்தில் வீரகேசரியில் தனது பத்திரிகைப் பணியைத் தொடங்கியவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தினபதி நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.யாழ்ப்பாணத்தில் தமிழில் பத்திரிகை ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற தேவை எழுந்தபோது 27.11.1985 அன்று உதயன் நாளிதழ் ம.வ கானமயில்நாதனைக் கொண்டு தொடங்கப்பட்டது.

அக்டோபர் 1995ல் இலங்கை ராணுவம் விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றத் தாக்குதலைத் தொடங்கியபோது யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து அச்சு சாதனப் பொருட்களை எடுத்துக்கொண்டு சரசாலை என்ற ஒரு இடத்திலிருந்து தொடர்ந்து உதயன் நாளிதழை வ.அ.கானமயில்நாதன் தலைமையில் தற்காலிகமாக இயக்கினார்.



பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு ஆண்டுதோறும் வழங்கும் ஊடக சுதந்திரத்துக்கான விருதை 17.11.2013 அன்று உதயனுக்கு வழங்கியது. இந்த விருதை ம.வ.கானமயில்நாதனும், உதயன் நாளிதழில் நிறுவனர் ஈ.சரவணபவனும் கூட்டாக இணைந்து பெற்றுக் கொண்டனர்.இலங்கை பத்திரிகையாளர்கள் வரலாற்றில் உள்நாட்டுப் போர் சூழலில் தொடர்ந்து அச்சமின்றிப் பணியாற்றித் தடம் பதித்தவர் வ.அ.கானமயில்நாதன். தொடர்ந்து உதயனின் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணியாற்றி, தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்திரையைப் பதித்து வந்தார்.இந்நிலையில் ம.வி.கானமயில்நாதன் திங்கட்கிழமை (22.11.2021) அதிகாலை யாழ்ப்பாணம் நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார். அவரது மறைவு தமிழ் ஊடகத்துறையில் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும். உடல் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மயானத்தில் செவ்வாய்க்கிழமை மாலை தகனம் செய்யப்பட்டது. இவரது மறைவுக்கு இலங்கையின் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# கடந்தவையும் கடப்பவையும் (11)

- உமா மோகன் -

இரு காலப் பிள்ளைகளும் பாவம்தான் ஆனாலும்
பல நாளாய்த் தனியே வாழ்வதென்றால் - அது

கொரோனாக் கால வாழ்வில்த் தானே - இதில்
பிறருடன் சேர முடியாது - தொற்றினால்

பெற்ற தாயும் கிட்ட வர இயலாது
உற்ற நண்பனும் வந்து பார்க்க முடியாது

மன அழுத்தம் அதிகரிக்கும் காலமிது - ஆனாலும்
உள மருத்துவ வசதிகளும் ஏராளம்

பதுங்கு குழி வாசலோடு வாழ்த போது - பிறருடன்
நெருங்கியே வாழ வாய்ப்பதிகம்

பதறி ஓடிய வேளையிலும் பக்கத் துணைக்காய்
கதறி அழுவதைப் பார்த்ததுண்டு

நெடுநாள் கூட்டுக்குள் இருப்பதென்றால்
ஆருக்கும் வேட்கை வரும் - அரணை

உடைத்துக் கொண்டு வெளியேற , உக்கிரமாய்
வெடித்துக் கொண்டு வருவதனை அறிந்தவர்

கிடைத்ததை எடுத்துக் கொண்டபடி - வீட்டில்
இருந்தவர் இருந்த கோலத்தோடு

அல்லோல கல்லோலப் பட்டவராய் - தம்
கால் போன திசைக்கு நடந்து வர - தேர்

ஓடும் வீதிபோல் நெருக்கடியை ஊர்
தோறும் அன்று பார்த்திடலாம்

நவராத்திரி நாளில் அன்று வீட்டுப் பூசை,
நலமாய் அதனை முடித்து விட்டு

படைத்தவற்றை உண்டபடி இருக்கும் போது
உடைத்து விட்டார் முன்னேற என்பது போல்

வெடிச்சத்தம், முன்னுக்கு இருந்தவர்கள்
படிப்படியாய் வந்திட்டார்கள் - இனி

வெளிக்கிட வேண்டியவர் நாங்கள் தானே
அடுக்கியே வைத்த பொருட்களோடு

கடக்கின்றோம் வல்லை வெளியை
கனக்கப் பேர் வருகின்றார் நடந்தும் தான்

வாகனம் என்பதால் வசதியாய்ப் போனது
சாமம் ஆவதற்குள் அங்கு போய்ச் சேர்வதற்கு

ஆனாலும் பாவம் அம்மையா,

மிதி உந்தில் வந்ததுவும் -அவன்
வழி மாறிச் சென்றதுவும் காரணமாம்

தாமதமாய் வந்த பேரனார் சொன்னார்- இவர்
தாயாரின் தந்தையார் அம்மையா என்றிடுவோம்

இம்மையிலும் மறுமையிலும் அவரைப்போல் ஒருவரை - இனி
எம்மால் காணமுடியாது , அவ்வளவு நல்லவர் - அனாலும்

அன்று அவரில் பெரும் கோபம்
என்றும் இல்லாக் கடும் கோபம்

'தம்பி!' அவன் எங்கு சென்றான்???

வல்வெட்டி, உடுப்பிட்டி வல்லை வெளி
அச்சுவேலி ஆவரங்கால் என நீண்ட தூரம்

ஓடியே வந்துள்ளான் என்பதைக் கேட்டதும்
வாடிப்போனோம் - மீண்டும்
தேடிப்போக ஆயத்தமானார் எனினும்

இரவு போய் என்ன பயன்? கேட்டனர் பலர்
விடியட்டும் என்றே நினைத்தபடி

தாங்காத பிரிவுத் துயர் உறுத்த
தூங்கா விழியினர் விழித்திருந்தோம்

ஐந்து மணிக்கு ஆலய மணிகள் - அங்கு
ஒன்றாய்ச் சேர்ந்து ஒலிக்கின்றன

வீட்டு வாசலில் நீட்டுத் தடியுடன் பூப்பறிப்பவர் - பக்திப்
பாட்டுடன் பூவைப் பறிக்கின்றார் - அவர்

நெற்றியில் அப்பிய திருநீற்றுப் பூச்சு - இறை
பற்றினைச் செப்பியே நிற்க

பக்திச் சூழலில் புகுந்திட்ட பூரிப்பு ஒரு
பக்கம் இருப்பினும் தம்பியின் நினைவு,

- அவன்

தாமதமாய் நாம் எழும்ப விடமாட்டான் - உடலில்
உபாதை ஏதும் வந்து படுத்திருந்தால்

எழும்பும் வரை பக்கத்தில் அவன் இருப்பான்
தெரிந்தவர் அன்றி பிறர் கிட்ட வர இலாது

வீட்டுக்கு நல்லவன் எம் வீட்டுச் செல்லம் அவன்
நீண்ட காலம் தம்பி இல்லை

குடும்பச் சாத்திரி குசும்புக்காரர், சொன்னதை
திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும் எப்பவோ

ஒரு தரம்தான் அவர் செவிகளுக்குச் செல்லும்
அது வரைக்கும் ஓயாமல் சொல்ல வேனும்

அம்மையாவின் நண்பர் அவர் தம்பி வர
சும்மா ஒரு கதை சொன்னார்

வீட்டினில் ஓர் அதிர்வு வேண்டும் 'தம்பி' - தினம்
கேட்க உண்மைக்கு வாய்ப்புண்டு எனச்சொல்ல

ஒற்றைக் காலில் நின்றே - அந்த
நாலு காலைப் பெற்றுக்கொண்டோம்

ஐந்தறிவோ ஆறறிவோ பற்றொன்று வைத்து விட்டால்
எவ்வுயிரும் சரிசமம்தான்

மீண்டும் போய்த் தேடியும் அவனை
கண்டு பிடிக்க முடியவில்லை

ஆண்டுகள் பல கழிந்து அவ்வழியால்
மீண்டும் மீண்டும் போய் வரவே

அவ்விடத்தில் அவன் இனத்தில் எதையேனும்
கண்டுவிட்டால் நின்று ஒருதரம் 'தம்பி'!

என்றே கூப்பிட்டுப் பார்ப்பதுண்டு
நன்றாய் வீட்டுக்குள் வாழ்ந்தவன்

அன்றோடு வீதிக்குப் போய் விட்டான்
இன்று அவன் இருக்க மாட்டான் - ஆனால்

இறந்திருந்தால் ஒரு நினைவு
தொலைந்து போனால் பல நினைவு

எவ்வளவு ஆசையோடு ஒரு பிள்ளை பிறக்கிறது
எத்தனையோ நினைவுகளை அது கொடுக்கிறது


கற்பனையும் கனவுகளும் உடையதாக வளர்கிறது
குற்றம் ஏதும் செய்யவில்லை பெற்ற தாய் முன்

கூட்டிப் போனார் , என்ன செய்தார் ?ஏது செயதார்?
கேட்கும் அவர் கேள்விகளில் வலி இருக்க - அதை
கேட்காமலே வன் செவிகள் பல அங்கு இருக்கு

(தொடரும்)


# அறிந்து கொள்ளுங்கள்...

மதுரை ராஜா




உலகப் புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர், "ஆல்பிரட் டென்னிசன்"- 1950-ஆம் ஆண்டு, நவம்பர்-19- அன்று, இங்கிலாந்து அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார். 1850 முதல் 1892 வரை, விக்டோரியா மகாராணியிடம் செல்வாக்கு மிக்கவராக திகழ்ந்தார்.

மதுரை ராஜா



இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், கல்வியாளருமான, "திருப்பூர் சுப்ரமணிய அவினாசிலிங்கம் செட்டியார்"- 1946 முதல் 1949 வரை, தமிழகத்தின் கல்வி அமைச்சராக இருந்தார். மதராஸ் மாகாணத்தில், தமிழ் வழிக் கல்வியை அறிமுகப்படுத்தி -யவர். 21-11-1996 அன்று காலமானார்.

மதுரை ராஜா





சுதந்திர இந்தியாவின் மூன்றாவது பிரதமர் என்ற பெருமையை அடைந்த, நேருவின் மகளான, "இந்திரா காந்தி"- 19-11-1917 அன்று பிறந்தார்.
1966 - 1977 வரை 11 ஆண்டுகள், பின் 1980 - 1984 வரை, இந்தியாவில் அதிக ஆண்டுகள் பதவி வகித்த பிரதமர் இவர்.

மதுரை ராஜா

"அறிவியலின் சாரம் என்பது, நாம் பயன்படுத்தும் கருவிகளில் இல்லை. சுயமான சிந்தனையிலும் கடுமையான உழைப்பிலும் தான் இருக்கிறது"- என்ற கோட்பாட்டை கூறிய, சர்.சி.வி. ராமன்,20-11-1970 அன்று பெங்களூரில் காலமானார்.





மதுரை ராஜா



இங்கிலாந்தில் உள்ள, "வின்ட்சர் அரண்மனை"- உலகப் புகழ் பெற்றது. 1992-ஆம் வருடம், நவம்பர்-20-ஆம் தேதி, மிகப் பெரிய தீ விபத்து, இந்த அரண்மனையில் ஏற்பட்டது.
இதனால், அரண்மனை மிகப் பெரிய அளவில் சேதமடைந்தது. அரண்மனையைப் புதுப்பிக்க, ஏழு ஆண்டுகள் பிடித்தது.

மதுரை ராஜா




1994-ஆம் ஆண்டு, நவம்பர்-19-ஆம் தேதி, தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில், இந்தியாவைச் சேர்ந்த, "ஐஸ்வர்யாராய்"- உலக அழகி -யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மதுரை ராஜா



1997-ஆம் ஆண்டு, நவம்பர்-20 -ஆம் தேதி, இந்தியாவைச் சேர்ந்த கல்பனா சாவ்லா, விண் வெளியில் பயணித்தார். விண் வெளியில் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமை -யை கல்பனா சாவ்லா படைத்தார்.
-மதுரை ராஜா-

மதுரை ராஜா




ஆங்கிலக் கவிஞர், Wordsworth -க்கு அடுத்து, புகழ் பெற்ற, "ஆல்பிரட் டென்னிசன்"- தனது 7-வது வயதிலேயே, புலமை பெற்றவராகத் திகழ்ந்தார்.
மேலே படத்தில் காணப்படும் இரண்டு புத்தகங்களும், அவரால் இயற்றப்பட்டவை. அவர் எழுதிய, "Idylls of the King" நூல் தான், அவரை உலகப் புகழ் பெறச் செய்தது.
எண்ணற்ற ஆங்கில இலக்கிய நாடகங்களை இயற்றி உள்ளார்.

# தமிழர்தம் எழுச்சியின் தற்கால அடையாளம் பிரபாகரன்

மலேசிய மடல்



நக்கீரன்


தமிழில் படைக்கப்படும் இக்கால இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் ஆன்மிகத்தை தழுவி-யே அமைகின்றன. அதனால், தமிழ் இலக்கியப் பாட்டையில் ஆளாளுக்கு பாத்தி கட்டிக்கொள்ளும் போக்கு அண்மைக் காலமாக வகைதொகை இல்லாமல் பெருகி வருகிறது.

இந்நிலை அருக வேண்டுமென்றால், தமிழ் இலக்கியவாணர்களிடையே இனம், மொழி குறித்த சிந்தனை பேரளவில் மறுமலர்ச்சி காணவேண்டியது காலத்தின் கட்டாயம்.

பழந்தமிழர் சமைத்த இலக்கியப் படைப்புகளில் காதலும் வீரமும் ஒன்றையொன்று விஞ்சும் அளவிற்கு இணையாக அணி வகுத்து நிற்கும்.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒருவருக்கொருவர் பொறாமைக் குணம் கொண்டிருந்தாலும் வீர தீரத்தில் பழுதில்லாதவர்கள். ஒருவரை யொருவர் மிஞ்சி நின்றவர்கள்.

குறிப்பாக, திருமாவளவன் என்னும் கரிகால் சோழன், சோழர் குலப் பெருமை அத்தனையையும் தனதாக்கிக் கொண்ட வீர மறவன். அடலேறை யொத்த அவ்வீரன், குமரிக் கடற்கரையில் இருந்து படைதிரட்டி, இமயம்வரை சென்று, தன்னை எதிர்த்தார் அனைவரையும் வீழ்த்தி புலிக்கொடியைப் பறக்க விட்டவன்.




தமிழிக்கிய வரலாற்று ஏடுகளில் படித்தறிந்த இத்தகைய வீரகாவியப் படைப்புகளை, நிகழ் காலத்தில் நம் கண் முன்னே படைத்து தமிழர் என்னும் இனத்தை உலகறியச் செய்த மாவீரர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21-ஆம் நூற்றண்டின் தொடக்கத்திலும் அவர் படைத்த வீர காவியத்தைத் தொடர இன்னொரு வீரத்தமிழரை தமிழன்னை படைப்பாளா என்ற ஏக்கம் நெஞ்சத்து அறையை கதகதக்கச் செய்கிறது.

பழந்தமிழர் சமைத்தை வீர தீர காவியங்களில், ஆடவர் மட்டும்தான் போர் முனைக்கு சென்றனர். ஆனால், நிகழ்காலத்தில் பிரபாகரன் என்னும் வீர மறவர் படைத்த போரப்பரணியில் தமிழச்சியரும் களம் புகுந்தனர் என்பது இன்னும் சிறப்புடைத்தது.

இன்று மேலை நாடுகளில் தமிழர் வாழ்வதற்கும் தமிழ் செழிப்பதற்கும் பிரபாகரன் மேற்கொண்ட அரசியலும் இராணுவ நடவடிக்கையும் தலையாய காரணம் எனலாம்.

மேற்கத்திய நாடுகளின் நாடாளுமன்றங்களில் தமிழர் உறுப்பியம் பெறவும், அந்தந்த நிலத்தில் தற்கால தமிழ் இலக்கியம் படைக்கப்படுவதற்கும் ஏடுகள் நடாத்தி தமிழ் வளர்ப்போர் நிலைத்திருக்கவும் பிரபாகரன்தான் மூலம் என்றால் இதை மறுப்பார் யார் இங்கே?

இந்தியா என்னும் நாட்டை உருவாக்கி, முடிந்தவரை ஆண்டுவிட்டு அங்கிருந்து ஆங்கிலேயர் திரும்பியபொழுது, இந்து சமயத்தைப் பின்புலமாகக் கொண்டு ஆரிய சாம்ராஜியம் இந்தியாவில் கட்டி அமைக்கப்பட்டது.

இந்த பார்ப்பனீய சாம்ராஜியம் இந்தியாவில் நிலைகொண்டிருக்கும்வரை, தமிழரும் தமிழும் தலையெடுக்கவே முடியாது. ஆண்ட தமிழர்கள் மீண்டும் தலையெடுக்ககூடாதென்பதில் புதுடில்லி வஞ்சக கோட்டைக் கொத்தலம் விழிப்பாக இருக்கிறது.

நிறையும் குறையும் எல்லாரிடத்தும் எவ்விடத்தும் உண்டு ஈழப் போர் முள்ளி வாய்க்காலில் இன்று நிலைகுத்தி நிற்பதற்கு ஆயிரம் காரணம் இருந்தாலும் அவற்றுள் தலை-யாய காரணம் பார்ப்பன குயுத்தி அரசியல்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைக்கு கேரள மாநிலத்தின் கடற்கரைதான் உதவியது.

தமிழ் மன்னர்கள் ஆண்டபொழுது சேர மரபினர் ஆண்ட நிலப்பகுதிதான் இன்றைய கேரளம். அந்த பண்டைய சேர மண்ணினர் அனைவரும் இன்று மலையாள மொழியி-னராக விளங்குகின்றனர்.

உடன் பங்காளி கொலையாளி என்பதைப் போல, மலை-யாள மொழி பேசுவோர் தமிழர்மீது ஏதொவொரு வகையில் காழ்ப்புணர்வு கொண்டவர்களாகத்தான் இருக்கின்றனர்.

அதனால்தான், தமிழர் சம்பந்தப்பட்ட அத்தனை விவகாரங்களிலும் ஆலோசனை சொல்ல புதுடில்லி தலைவர்கள் அமர்த்திக் கொள்வது மலையாள அதிகாரிகளைத்தான். இத்தாலியில் பிறந்த சோனியாவும் அதையேதான் செய்தார். சோனியாவின் தந்தையும் தந்தையின் தந்தையும் முசோலினி-யின் இராட்சசப் படையில் பங்காற்றியவர்கள். ஒரு வகையில், சோனியாவும் ஆரிய குலத்தைச் சேர்ந்தவர்தான்.

தமிழர்கள் அதிகமாக வாழும் மலேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணிபுரியும் உள்நாட்டு அதிகாரிகளும் அலுவலர்களும் பெரும்பாலும் மலையாளிகளாகத்தான் இருக்கின்றனர்.

தமிழர்க்கு நேர் எதிரான மனநிலை கொண்டவர்கள் யாரென்று சோ-னியா காந்திக்கு தெரிந்திருக்கும் தகவல், அண்டையில் இருக்கும் சிங்கள அதிகாரிகளுக்குத் தெரியாதா என்ன?

காலமும் இயற்கையும் காலமெல்லாம் இப்படியேத் தமிழருக்கு எதிராக இருக்காது இயற்கையே வலிய வந்து தமிழர்க்கும் தமிழர்தம் நிலத்திற்கும் தமிழர் பேசும் மொழிக்கும் துணை நல்கும் காலம் ஒரு நாள் சமையும். அதற்கேற்ப, இன்னொரு பிரபாகரன் தமிழர் குலத்தில் தோன்றுவார்.

மேதகு பிரபாகரன் அவர்களுக்கு 2021 நவம்பர் 26-ஆம் நாள், 67-ஆவது பிறந்த நாள். இந்த வேளை, மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறதா அல்லது மனதை அழுத்துகிறதா என்று என்னால் உணர முடியவில்லை. அதேவேளை, என் விழித்திரைகளில் படரும் ஈரம், கணினித் திரையையும் மறைக்கிறது.

**நக்கீரன்** - Nakkeeran **013-244 36 24**
**கோலாலம்பூர்**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# 128 வருடங்களுக்கு முன்னர் ஹவாயில் நடந்த புரட்சியின் போது அரசகுடும்பத்திற்கு என்ன நடந்தது?

- குரு அரவிந்தன்



“எரிமலைத் தீவான ஹவாயில் மன்னராட்சிக்கு எதிராக நடந்த புரட்சியின் போது அரச குடும்பத்தவர்களுக்கு என்ன நடந்தது, அந்த அரசகுடும்பத்தவர்கள் எல்லாம் எங்கே?” என்ற கேள்வியை வாசக நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டிருந்தார். முக்கியமாக பிரெஞ்சுப் புரட்சியின் போது அந்த அரசகுடும்பங்களுக்கு நடைபெற்றது போல கழுத்து வெட்டப்பட்டோ, அல்லது தூக்கில் இடப்பட்டோ கொடூரமரணம் சம்பவித்ததா? அல்லது வேறுவிதமாகத் தண்டிக்கப்பட்டார்களா என்பதை அறிவதிலேதான் அவரது வரலாற்றுச் சிந்தனை இருந்தது. பாரிஸ் நகருக்குச் சென்றபோது அங்குள்ள அருங்காட்சியகத்தில் பிரெஞ்சுப் புரட்சியின் போது, அங்கிருந்த அரசகுடும்பத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றிய ஓவியக் காட்சிகளைப் பார்த்திருக்கிறேன். 1793 ஆம் ஆண்டு 16 ஆம் லூயி மன்னனுக்கு என்ன நடந்தது என்பதை ஓவியமாகத் தீட்டியிருந்தார்கள். கட்டுரைகளில் சிறிது வரலாறும் இடம் பெற்றால் அந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்புப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முடியும் என்பதையும் அவர் தெரிவித்ததால்தான், இந்தத் தேடல் ஏற்பட்டது.


ஹவாயில் கொனலுலுவில் உள்ள புகழ்பெற்ற வைக்கீகீ கடற்கரையில் உள்ள கமே ஹமேகா என்ற புகழ்பெற்ற மன்னரின் சிலைக்கு மலர்மாலை சூட்டி மன்னரின் காலடியில் தினமும் மலர்கள் தூவியிருந்தார்கள். சிலைகளை உடைத்தெறியும் இந்தக் காலத்தில், அவரைத் தனிப்பட்ட முறையில் மதித்தவர்கள் இதைச் செய்திருக்கலாம். பொதுவாக ஜனநாயக அரசியலுக்கு, அல்லது இடதுசாரி அரசியலுக்கு வந்தவர்கள் மன்னராட்சியை மறக்கவே விரும்புவார்கள். எனவேதான் நான் சந்தித்த உள்ளூர் மக்களிடம் அவர்களின் முதலாவது மன்னரைப் பற்றி விசாரித்தேன்.



1810 ஆம் ஆண்டு ஹவாய் இராச்சியத்தை நிறுவிய மன்னனான கமே ஹமேகாவின் சிலை ஒன்று கொனலூலூ டவுன்ரவுணில் உள்ள அலையோலானி மண்டபத்திற்கு முன்னாலும், இது போன்ற இன்னுமொரு சிலை பிக் ஐலண்ட் என்று சொல்லப் படுகின்ற ஹவாயின் இன்னுமொரு பெரியதீவில் இருப்பதையும் அங்கு சென்ற போது நான் அவதானித்தேன். ஒரே மாதிரியான இரண்டு சிலைகள் எப்படி வந்தன என்று விசாரித்த போது அதைப் பற்றி ஒரு கதையே சொன்னார்கள்.

1878 ஆம் ஆண்டு கப்டன் குக் ஹவாய்தீவை அடைந்த 100 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக மன்னருக்கு ஒரு சிலைவைக்க முற்பட்டாலும், அந்தச் சிலையின் வேலைகள் முற்றுப் பெறவில்லை. இச்சமயத்தில் மன்னர் இறந்துவிடவே அவருடைய இடத்திற்கு வந்த டேவிட் ஹலகாவுவா மன்னன் அந்தச் சிலையை அலையோலானி மண்டபத்திற்கு முன்னால் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார். 1883 ஆம் ஆண்டுதான் இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டு ஹவாய் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, சிலையைக் கொண்டு வந்த கப்பல் போக்லாண்ட் தீவுகளுக்கு அருகே மூழ்கிப் போகவே, காப்புறுதி இருந்ததால், அதுபோன்ற வேறு ஒரு சிலையைச் செய்யும்படி கேட்டிருந்தார்கள்.

புதிய சிலை செய்து அனுப்பப்பட்ட அதே சமயம், போக்லாண்ட் கடற்தொழிலாளர் சிலர் பழைய சிலையைக் கடலில் இருந்து மீட்டெடுத்திருந்தனர். 875 டொலரைக் கொடுத்து அந்தச்சிலையையும் இவர்கள் வாங்கினார்களாம். முதலில் செய்யப்பட்ட மன்னரின் இந்தச் சிலை மன்னர் பிறந்த இடமான ஹோகாலா என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இதனால்தான் ஒரே மாதிரியான கமே ஹமேகா மன்னரின் இரண்டு சிலைகள் ஹவாய் மக்களுக்குக் கிடைத்தது. ஹவாய் தீவுகளை அமெரிக்காவின் 50வது மாகாணமாக்கிய போது இன்னுமொரு சிலை 1969 ஆம் ஆண்டு அமெரிக்காவின் தலைநகரில் நிறுவப்பட்டது. இந்த சிலை முன்னாள் அமெரிக்க அதிபராக இருந்த பராக் ஒபாமா அவர்கள் பதவி ஏற்ற போது பொதுமக்கள் பார்வைக்காக பொது இடத்தில் வைக்கப்பட்டது. காரணம் பராக் ஒபாமா ஹவாயில் உள்ள கொனலூலூவில் கப்பியோலானி மருத்துவ மனையில்தான் 1961 ஆம் ஆண்டு பிறந்திருந்தார்.



கமே ஹமேகா ஹவாயில் பிக்ஜலன்ட் என்று சொல்லப்படுகின்ற பெரிய தீவில் பிறந்து வளர்ந்த முதலாவது மன்னராவார். ஹவாய் வானத்திலே வால் நட்சத்திரம் (Halley's Comet) தோன்றிய வருடமான 1758 ஆம் ஆண்டுதான் இவர் பிறந்ததாகச் சொல்கிறார்கள். அங்கே இருந்த “நாகக்கல்” என்று சொல்லப்படுகின்ற பெரிய கல்லைத் தனது பலத்தைப் பாவித்துத் தூக்கியதால் அவரை மன்னராக ஏற்றுக் கொண்டதாகவும் கதைகள் உண்டு. தமிழர் பிரதேசத்தில் இன்றும் நாகவழிபாட்டு வழக்கமும், சில கிராமங்களில் கல்லைத் தூக்கி வலிமையைப் புலப்படுத்தும் வழக்கமும் நடைமுறையில் இருப்பதும் நினைவில் வந்தது. 1810 ஆம் ஆண்டு தனது படைகளுடன் வைக்கிக்கி கடற்கரையில் போரிட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஹவாய் தீவுகள் எல்லாம் கமே ஹமேகா மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. 1795 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த இவர் 1819 ஆம் ஆண்டு மரணமானதைத் தொடர்ந்து இவரது மகன் பதவிக்கு வந்தார். அவர் கடைசிக்காலத்தில் வழிபட்ட வழிபாட்டுத் தலத்தையும் பெரிய தீவிற்குச் சென்றபோது பார்க்க முடிந்தது.

மொத்தமாக எட்டு பேர் தொடர்ச்சியாக ஹவாய் அரசபீடத்தில் இருந்தார்கள். இவர்களில் ஏழு பேர் ஆண்களாகவும் கடைசியாகப் பதவி ஏற்றவர் மட்டும் பெண்ணாக இருந்தார். லில்லிஜோ கலானி என்பது இவரது குடும்பப்பெயர். 1891 ஆண்டு கடைசியாகப் பதவிக்கு வந்த அரசியான இவர் 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை பதவியில் இருந்தார். அழகுணர்வு கொண்ட இவர் ஆடம்பர வாழ்க்கையில் அதிக பணத்தைச் செலவிட்டதால் மக்கள் வெறுப்படைந்தனர். அரசியின் ஆடம்பரமான மாளிகையான “லோலானி பலஸ்” என்ற மாளிகை அரச பரம்பரையினர் வாழ்ந்த மாளிகையாகையால் அதையும் பொதுமக்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கிறார்கள். அங்கு சென்று பார்த்த போது, தரைவிரிப்பான கம்பளத்தில் இருந்து 14 கரெட் வைரம் வரை எல்லாமே மிக விலை உயர்ந்த பொருட்களாக இருப்பதை அவதானிக்க முடிந்தது.



சுமார் 128 வருடங்களுக்கு முன் ஹவாய் மண்ணில் நடந்த எதிர்பாராத சம்பவம் ஒன்று ஹவாயின் சரித்திரத்தையே மாற்றி அமைக்கக் காரணமாக இருந்தது. 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பிரபல வர்த்தகர்களும், கரும்புத்தோட்ட முதலாளிகளுமாக மொத்தம் ஆறு பேர் சேர்ந்து ஹவாயில் அரச ஆட்சியைக் கவிழ்த்தார்கள். நிலச்சொந்தக்காரர்கள் தங்களுக்கென்று பாதுகாப்புப் படையை வைத்திருந்ததால் அவர்களுக்கு இது இலகுவாக இருந்தது. இதில் நான்கு அமெரிக்கர்கள், ஒரு பிரித்தானியர், ஒரு ஜேர்மனியர் ஆகியோர் முக்கியமாக இடம் பெற்றிருந்தனர். அதுவே பின்னாளில் அமெரிக்காவின் 50வது மாகாணமாகக் ஹவாய் மாறுவதற்கு வழிவகுத்தது. இங்கேயும் அரசபதவிக்காக நடந்த குளறுபடிகள் அமெரிக்காவுக்குச் சாதகமாக அமைந்தன. காரணம், அமெரிக்காவின் பசுபிக்கடற்பிராந்தியப் பாதுகாப்புக்கு ஹவாய் தீவுகள் முக்கியமாக அவர்களுக்குத் தேவைப்பட்டன. இதுவே ஒரு கட்டத்தில் ஆயுதப்புரட்சி இன்றி, ஹவாயில் அரசியல் மாற்றம் ஏற்பட வழிவகுத்தது.




ஹவாய் மன்னராட்சியின் வீழ்ச்சியின் போது அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் பொஸ்டன் என்ற 284 மாலுமிகளைக் கொண்ட கடற்படைக் கப்பல் ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி 1892 ஆம் ஆண்டு தொடக்கம் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி 1893 ஆம் ஆண்டுவரை அங்குள்ள துறைமுகத்தில் தரித்து நின்றதாகப் பதிவுகள் இருக்கின்றன. ஹவாயில் உள்ள அமெரிக்கர்களின் சொத்துகளுக்கும் உயிர்களுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக ஜனவரி 16 ஆம் திகதி 1893 ஆம் ஆண்டு பிற்பகல் அமெரிக்கக் கப்பல் படையினர் அப்பகுதிகளில் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்தனர். ஏன் அவர்கள் அங்கு நிற்கிறார்கள் என்பதோ, ஹவாயில் மன்னராட்சி முடிவுக்கு வரப்போகிறது என்பதோ மக்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. கத்தியின்றி, ரத்தமின்றி முடியாட்சி, ஜனநாயக ஆட்சியாக மாற்றப்பட்டு, அமெரிக்காவின் மாகாணமானது.



வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஹவாய் அரசி லில்லிஜோ கலானி 1917 ஆம் ஆண்டு மரணமானார். அமெரிக்காவின் ஒரே ஒரு இளவரசியாகத் 95 வயதான, ஹவாயின் அரசபரம்பரைக் கடைசி வாரிசான Kekaulike kawananakoa ஹவானனகோவா இப்போதும் இருக்கின்றார். கோடீஸ்வரியான இவருக்குக் ஹவாய், கலிபோனியா, வாஷிங்டன் ஆகிய இடங்களில் குதிரைப்பண்ணைகள் இருக்கின்றன.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 974



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

அஞ்ஞாதவாசம் முடிந்து தங்களைப் பாதுகாத்த துர்க்கையைப் போற்றி ஒன்பது நாட்கள் வழிபாடு செய்தனர். பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று ஆயுதங்களைக் கையிலெடுத்துத் தேவியை வணங்கி, மீண்டும் தமது நாடேகினர். பஞ்ச பாண்டவர்கள் ஸ்ரீ துர்க்கா நட்சத்திர மாலிகா துதி என்ற இருபத்தியேழு சுலோகங்களைக் கொண்ட துதியைப் பத்து நாட்களும் ஓதி, வழிபட்டுப் பல பேறுகளைப் பெற்றனர். இவ்வாறான பல கதைகளோடு வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தினை நினைவுகூர்ந்து அன்னையின் அருளைப் போற்றும்வகையில், வன்னிமரக்கிளையொன்றை வாழைமரத்திலே கட்டிவைத்து பூசை செய்து வன்னி வாழைவெட்டு நடைபெறும். இவ்வாறு நடைபெறுவதையே வழக்கில் மானம்பு என அழைப்பர். வெற்றிகளையும், வளங்களையும் அருளவல்ல நவராத்திரி விரதத்தினை மாநோன்பு என்றே ஆதியில் அழைத்துள்ளனர். இச் சொல் பிற்காலத்தில் மருவி வாழைவெட்டன்று நடைபெறும் விழாவை மானம்பு என அழைக்கும் வழக்கமாக மருவியுள்ளது.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் பல் வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதற்கு அன்னையின் அருளும், அன்னைமீது மக்கள் பயபக்தியுடன் செலுத்தும் ஆராத பக்தியுமே காரணமாகக் காணப்படுகின்றது. பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட கும்பவிழாவைப்போல, இளந்தலைமுறையினரையும் ஆலயவழிபாட்டில் ஈடுபடுத்தும் முக்கிய விரதமாகக் கேதாரகௌரி விரதம் அமைந்துள்ளது. சிவ விரதங்களுள் மிக முக்கியமான விர-தமாக இவ்விரதம் கருதப்படும். கேதாரகௌரி விரதத்தின் பெயர் காரணமாகப் பலரும் இவ்விரதத்தினைச் சக்திவிரதம் என்றே எண்ணுகின்றனர். இமயமலைச் சாரலிலுள்ள கேதாரநாதர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள கேதாரேஸ்வரப்பெருமானை.

இத்தலத்து நாயகியாகிய கேதாரகௌரி அம்பாள் வழிபட்டு விரதமிருந்தமையால், இவ்விரதத்திற்குக் கேதாரகௌரி விரதம் எனப் பெயர் எறுபட்டது. இவ்விரதம் புரட்டாதி மாதம் விஜயதசமியன்று ஆரம்பித்து, ஐப்பசிமாத அமாவாசைத்திதியில் நிறைவுபெறும். இருபத்தியொரு நாட்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம் திருகோணமலையிலுள்ள ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவ்விரதத்தின் பலனாக திருமணப்பேறு, மகிழ்ச்சியான இல்லறவாழ்க்கை, மகப்பேறு என்பன கிட்டுவதால், இவ்விரதத்தினைப் பெருந்தொகையானோர் வருடந்தோறும் அனுட்டித்து வருகின்றனர்.

ஸ்ரீ பத்திரகாளியின் அருளையும் அற்புதங்களையும் உணர்ந்த சக்தி உபாச-கர்கள், இவ்விரதத்தை அனுட்டிப்பதற்காக நாடெங்கிலுமிருந்து இவ்வாலயத்தை நாடிவருவர். ஓவ்வொரு வருடமும் சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் இவ்வாலயத்தில் கேதாரகௌரிவிரதத்தை அனுட்டிக்கக் கூடுவர். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் தரிப்பதற்குரிய விரதநூலும், வகைக்கு இருபத்தியொன்றாக பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சள், பூ, பலகாரம் என்பனவும், தேங்காய், விபூதி, குங்குமம், என்பனவும் அடங்கிய பூசைப்பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப்பூசை நடைபெறும். பூசை முடிவில் இவ்விரதத்திற்காக முன்னரே பதிவு செய்துகொண்டவர்களை அழைத்துப் பூசைப் பெட்டிகளை வழங்குவர். தனியாக விரதநூலை மட்டும் பெற்று இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களும் உண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பவர்களுக்கு அடுத்தநாள் பாரணைப்பூசையும் செய்து அனுப்புவார்கள்.

1980 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின் ஆனி உத்தரத் திருவிழாவும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது. சிவராத்திரியைத் தொடர்ந்து நடைபெறும் கோணேசர் ஊர்வலத்தில், மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமான் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஒரு-நாள் தங்கியிருப்பார். கோணேசப்பெருமான் இவ்வாலயத்திற்கு எழுந்தருளும்பொழுது ஆலய ஆதீனகர்த்தரும், அடியார்களும் பல்வேறு உபச்சாரங்களுடன் மங்கள வாத்தியங்கள் முழங்க வரவேற்று ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து, பூசை முதலியன முடித்து, மாலையில் மங்கள வாத்தியங்கள் முழங்க வீதியுலாவிற்கு அனுப்பி வைப்பார்கள். இவ்விழாக்களோடு கும்பாபிஷேகம் நடைபெற்ற திதிக்கு வருடா வருடம் சங்காபிஷேகம் நடைபெறும். சங்காபிஷேகத்திற்கு முன்னுள்ள பத்து நாட்களும், இலட்சார்ச்சனை நடைபெற்ற மறுநாள் சங்காபிஷேகம் நடைபெ-றும். அம்பிகையின் ஆயிரத்தெட்டு நாமங்களை பீஜமந்திரத்தோடு உச்சரித்து ஐந்து சிவாச்சாரியார்கள் ஒரு நாளைக்கு இரண்டு தரம் பத்து நாட்களுக்கு அர்ச்சனை செய்து இலட்சார்ச்சனையை நிறைவு செய்வார்கள். ஸ்ரீ பத்திரகாளி ஆலயத்திற்கென ஒரு சிரமதானப் பணிக்குழு இயங்கி வருகின்றது. இவ்வாலயம் சிறப்பாக இயங்குவதற்கு ஆதீனகர்த்தரின் செயற்பாடுகளும், சிரமதானப் பணிக்குழுவின் பணியும், மக்களின் பங்களிப்பும் பெரிதும் கைகொடுத்து உதவுகின்றது.

ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் மீது ஆராத பக்திகொண்டு அன்னையின் புகழைப் பாடிப் பரவசமானோர் பலராகக் காணப்படுகின்றனர். திரு. வி. வேலாயுதபிள்ளை ஆசிரியர் மற்றும் திரு வே. அகிலேசபிள்ளை ஆகியோர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் மீது திருவூஞ்சல் பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வாறே திரு. வ.கோ. வேலுப்பிள்ளை வைத்தியர் அவர்கள் திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் காவியத்தையும், திரு மாசிலா சிவதாசன் அவர்கள் ஸ்ரீ பத்திரகாளி திருக்குளிர்ச்சிக் கவிகளையும் பாடி அன்னையைப் போற்றியுள்ளனர்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ பத்தரிகாளி அம்பாள் திரு-வருளால் பல அற்புதங்கள் காலத்திற்குக் காலம் நடைபெற்று வருகின்றது. இக்காரணத்தினால் அம்பாளின் மீது பக்தர்களுக்குப் பயபக்தி ஏற்படுகின்றது. தமது துயர்களைத் தாயிடம் கூறி ஆறுதல் அடைவது போல உலகமாதாவாகிய அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளிடம் கூறி, இவ்வூர் மக்கள் ஆறுதல் அடைவர்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


ஈழமுரசு
ஈழமுரசும்,
கனடாவாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்
அகவை
67
விழா!
தலைவன் பிறந்தநாள்
அதுவே தமிழன் நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத வீரம்
மண்டியிடாத மானம்
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
மாபெரும் எழுச்சி விழா
2021 நவம்பர் 26 வெள்ளிக்கிழமை
மாலை 5-மணி
இசைக் குழுவினரின், எழுச்சிக் கானங்கள்
சுதந்திர பறவைகள்
இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East,
Scarborough on MIT 3T4
(Kennedy & Finch)
647-783-3466 / 647-808-7766

# கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
# சர்க்கரைப் பொங்கல் விழா - 2022
# சமயப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: Jan 2nd 2022 (Sunday) 9.00 AM

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள் :**

மழலைகள் : 01-01-2017 இற்குப் பின் பிறந்தோர்
ஆரம்பப் பிரிவு : 2016ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 1 : 2015ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 2 : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 3 : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 4 : 2012ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 5 : 2011 ஆம் ஆண்டில் பிறந்தோர்
பிரிவு 6 : 2010-2009 ஆம் ஆண்டுகளில் பிறந்தோர்
பிரிவு 7 : 2008-2007 ஆம் ஆண்டுகளில் பிறந்தோர்
பிரிவு 8 : 2006 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர்

- மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

---

குறிப்பு:
1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4ஆவது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு 5 டொலர்கள் அறவிடப்படும்.

**டிசெம்பர் 29, 2021க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ------------------------------------------------------
குடும்பப் பெயர்: ------------------------------------------------------
பிரிவு: ------------------------------------------------------
பிறந்த திகதி: ------------------------------------------------------
தொலைபேசி எண், email: ..............................................
பங்குகொள்ளும் போட்டிகள்:
பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி ☐

---

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email : canadahindumaamantram@gmail.com

---

**மேலதிக தொடர்புகளுக்கு:**

416 496 0587, 416 496 9595, 416 278 9432, 416 451 8427, 416 356 7323, 416 532 7897, 416 560 6926, 647 343 7283, 416 492 4908, 416 497 4741, 416 363 2445, 905 294 0623, 905 785 6526, 416 797 1517, 416 531 1650

**விண்ணப்ப முடிவு திகதி: டிசெம்பர் 29, 2021**


20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans
- Cheque Cashing rate of 2.5%

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
#4986,4980,#0372,#1520,#4993,#4998,Cr53,Cr245,Cr50,Cr66,Cr54,Cr246,Cr226,Cr157,Cr167,Cr187

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

We offer:
Gift cards and all top up
(domestic and international)



தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# இவ்வார ராசிபலன்

**26-11-2021 வெள்ளி தொடக்கம் 02-12-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணப்புழக்கம் சீராகும் வாரம். மூத்தோர் மனகுறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கடன் கச்சைகள் தீரும். மனஅமைதி கூடும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கூடும். விரக்திகள் மறையும். உறவினர் வழியால் செலவு அதிகரிக்கும். ஞாபகமறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். புதிய நட்பு உருவாகும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. தேக ஆரோக்யம் கூடும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலைபளு கூடும். உற்சாகம் களைகட்டும். விரும்பியது நிறைவேறும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: *4,2,3,9*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்கள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,X





**ரிஷபம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். மனிதநேயம் மிகுதியாகும். பழைய பாக்கி வசூலாகும். வணிகத் தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசுவகையில் அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைப்படும். புதிய முயற்சியை தள்ளி போடவும். வங்கி சேமிப்பு உயரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வேலவப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: *2,5,7,9*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** மிதுனம்: பாராட்டுக்கள் கிடைக்கும் வாரம். தொழில் வளம் கூடும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். கல்வியில் ஆர்வம் கூடும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவினரால் நன்மை ஏற்படும். மாலை நேரத்தில் மங்கல செய்தி வரும். உத்யோக வாய்ப்புண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் தரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். விளையாட்டுத்துறையில் வெற்றிக்கிட்டும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *5,9,2,1*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**கடகம்:** திட்டமிட்ட காரியம் ஜெயமாகும் வாரம். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். பாராட்டுக்கள் உயரும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். பொருளாதாரம் உயரும். நல்லோர்களின் வாழ்த்து உண்டாகும். எதிரிகள் தொல்லை குறையும். தனவரவு அதிகரிக்கும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் உருவாகும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகள் வழியில் தொல்லைகள் உண்டாகும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பொதுவாழ்வில் புகழ் கூடும். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். உடல்பொலிவு கூடும். ஆடை, அணிகலன் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: *6,4,3,8*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,U




**சிம்மம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. குடும்ப கௌரவம் உயரும். சச்சரவுகள் அகலும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் தொடங்குவீர்கள். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். மனைவி சச்சரவு தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல் நலத்தில் அதிக அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். கூட்டு தொழில் லாபம் தரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. விவேகம் அதிகரிக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். இயற்கை காட்சிகளைக் கண்டு இன்புறுவீர்கள். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டார பழக்கம் நலம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: *9,1,7,3*
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




**கன்னி:** வருமானம் சேரும் வாரம். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். விளையாட்டுத் துறையில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குச் சந்தையில் பணம் புரளும். சொல்வாக்கு மேம்படும். செல்வாக்கு கூடும். பெருமைகள் சேரும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவ செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பர பொருள் சேரும். நண்பர்கள் சந்திப்பு கிட்டும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதமாக அமையும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: *7,9,1,2*
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: **0091-9840160068 / 9940431377**




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். சுபவிரயம் ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் விற்பனையாகும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவுக்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்யம் சீராகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுபெறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: *2,9,7,8*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுபெறும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். பழையக் கடன் தீரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். திருப்புமுனை ஏற்படும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. வர்த்தக தொழில் லாபம் தரும். பிரியமானவர்களைச் சந்திப்பீர்கள். மகான்களின் சந்திப்பு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மரத்தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: *7,3,0,2*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**தனுசு:** சாதனை படைக்கும் வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். மெத்தனப் போக்கு மாறும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த காரியம் வெற்றி பெறும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். பிள்ளைகளிடத்தில் உள்ள அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். புதிய எண்ணம் உருவாகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்கள் கவனம் தேவை. மருத்துவ செலவு உண்டு. மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜோதிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: *2,4,8,7*
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**மகரம்:** ஆசைப்பட்ட பொருள் வாங்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புத்திர வகையில் சந்தோ'ம் கூடும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு செய்வீர்கள். பாக்கெட்டில் காசும் குறையும். பந்தாவும் குறையாது.
வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: *7,2,5,1*
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**கும்பம்:** வேண்டாத உறவுகளை தவிர்க்கும் வாரம். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கணவன், மனைவி வாக்குவாதங்கள் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்கர்களிடத்தில் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். மருத்துவச் செலவுகள் குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். திருப்தி பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை தரும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். வீண் செலவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். புதிய தொழில் துவங்க வாய்ப்பு உள்ளது. முன்னேற்றம் தரும் காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: *1,4,8,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Q




**மீனம்:** பிதா வழி உறவு சேரக்கூடிய வாரம். மனோபலம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மையுண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சுபகாரியம் தடைப்படாதிருக்கும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வழி ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். புகழ் அதிகரிக்கும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பணிசுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. இல்லத்தில் நல்லவை நடக்கும். பழையக் கடன் தீரும். சகோதர உறவு பலப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். உடல்வலிகளிலிருந்து விடுதலை அடைவீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் கூடும். பூர்வீக சொத்து வரும். புத்தாடை ஆபரணம் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: *4,8,6,3*
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Y

## ஜீவன் முக்தி (பகுதி ) 131

# உள்ளார்ந்த ரகசியம்...



### ஆசையின் சகசியம்

- நான் ஏன் பிறந்தேன்?

ஆசைகளை அடைய.

- நான் ஏன் இரண்டுங்கெட்டானாய் வாழ்கிறேன்?

சில நேரம் வாழ விரும்புகிறேன்.

- சில நேரம் வாழ்வையே வெறுக்கிறேன் ஏன்?

இரண்டுக்கும் காரணம் ஒன்றுதான்.

- ஏது? ஆசைகள்.
- ஆசைகளா?

ஆம், ஆசைகள் நிறைவேறும்போது வாழ்க்கையில் விருப்பங்கொள்வீர்கள். அவை நிறைவேறாதபோது வெறுப்புக் கொள்வீர்கள். வாழ்வின் மூச்சு ஆசைகள்.

- பல நேரம் ஆசைகள் நிறைவேறிய பின், கூட திருப்தி வருவதில்லை. மாறாக. ஆசைகளின் வீரியம்தான் அதிகமாகிறது. அதன் மீதான வெறிதான் கிளம்புகிறது. இது என்ன?

அப்படியென்றால் அவை ஆகாமிய ஆசைகள்.

- ஆகாமிய ஆசைகளென்றால்?

இரண்டு பொரிய ஆசைகளுண்டு. 1. ஆகாமிய ஆசைகள் 2. பிராரப்த ஆசைகள்

- பிராரப்த ஆசைகளென்றால்?

பிராரப்த ஆசைகள் என்றால் இந்தப்பிறவியில் அனுபவிக்க வேண்டும் என முடிவு செய்து நீங்கள் எடுத்து வந்த ஆசைகள்.

ஆகாமிய ஆசைகள் என்றால் இப்பிறவிக்கான ஆசைகளை அனுபவிக்கும்போது, இந்தப் பிறவியில் புதிது புதிதாய் நமக்குள் நுழைந்து கொள்ளும் ஆசைகள்.

- இரண்டில் எது நல்லது? எது கெட்டது?

பிராரப்பத ஆசைகள் நல்லது. ஆகாமிய ஆசைகள் கெட்டது.

- ஆகாமிய ஆசைகள் கெட்டவையா?

ஆகாமிய ஆசைகள் மனம் சம்பந்தப்பட்டவை. மனதில் சொருகப்பட்டவை. பிராரப்த ஆசைகள் உயிர் சம்பந்தப்பட்டவை. உயிரிலிருந்து வருபவை. மனம்தான் மனிதனின் நோய். எனவே தான் ஆகாமிய ஆசைகள் திருப்தியைத் தருவதில்லை.

இப்படி எந்தெந்த ஆசைகள் உங்களுக்குள் வெறியை கிளப்புகின்றனவோ அதிருப்தியை தருகின்றனவோ அசை ஆகாமிய ஆசைகள். புதர் ஆசைகள்.

- பிரரப்த ஆசைகளை மட்டும் நல்ல ஆசைகள் என சொல்வதேன்?

உடலெடுக்கும் முன்பு உயிராய்த திரிந்தபோது, உங்களோடு இருந்த ஆசைகளிலிருந்து வந்தவையே பிரரப்த ஆசைகள். அந்த ஆசைகள் நிறைவே-றினால் உயிர் குளிரும். மனதின் சூடு தணியும்.

பிராரப்த ஆசைகள் தீர்ந்து போனால் முழுச் சுதந்திரம் அடைந்து விடுவீர்கள். பிறவிப் பெருங்கடலில் இருந்து தப்பித்துவிடுவீர்கள்.

- பிராரப்த ஆசைகளை அனுபவித்துத் தீர்த்து விட்டால் முக்தியடைந்து விடுவேனா?

பிராரப்த ஆசைகளை அனுபவிக்கவே விடாத அளவுக்கு ஆகாமிய ஆசைகள் மனதில் அதிகமாகி விடுகின்றன. அவற்றின் கொட்டத்தை நீங்கள் அகற்றாதவரை, பிராரப்த ஆசைகளை தொடக்கூட முடியாது.

- ஆகாமிய ஆசைகளை அகற்றுவது எப்படி?

அந்த ஆசைகளை அகற்றும் முறைதான் நித்திய தியானம். அகற்றும் கருவி ஞானக் கருத்துகள்.

- மனிதப்பிறவு பற்றிய ஆழமான ரகசியம் ஒன்றைச் சொல்லுங்கள்....

உபநிடத ரகசியம் ஒன்று.... 'நீங்கள் பிறக்கவும் இல்லை, இறக்கவும் இல்லை.'

- அப்படியென்றால் முற்பிறவு, இப்பிறவி, மறுபிறவி என்பதெல்லாம்.....

கடலில் எழும் அலைகள். அடுத்தடுத்து பல தனித்தனி அலைகள் எழுந்தாலும் எந்த அலையும் தனி அலை அல்ல. அதேபோல் எந்தத் தனி மனி-தரும் தனி அல்ல. இறைசக்தியின் அலைகளே.

அலை எழும்பும், பிறக்காது. பிறக்காது என்பதனால் இறப்பும் இல்லை. இது இரண்டும் இல்லாத நிலையிலிருப்பதால்தான் உங்களின் ஜீவன் ஏற்கனவே முக்தியடைந்த ஜீவன் என இப் புத்தகத்தின் முகல் அகவிதையில் குறிப்பிட்டிருந்தோம்.

### கர்மச் சக்கர இரகசியங்கள்

- ஏன் ஒரேவீட்டில் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று புத்திசாலியாகவும், இன்னொன்று மண்டூகவும் இருக்கிறது?
- ஏன் சிலருக்கு மட்டும் அதிஷ்டம் கொட்டுகிறது?
- ஏன் சிலருக்கு மாத்திரம் எந்த கொட்ட பழக்கம் இல்லாதபோது கூட பெரிய, பெரிய நோய்கள் வருகின்றன. ?

திருப்தி அடையாத ஆசைகளும், முழுமையாக அனுபவிக்கப்படாத ஆனுபவங்களும் சேர்ந்துதான கர்மா அல்லது கர்மவினை என்று அழைக்கப்படுகின்றது.

ஆசை நிராசையால் உந்தப்பட்டு, நிராசையிலேயே முடிவதால்தான் மீண்டும், மீண்டும் ஆசை உருவாகிறது. கர்மச் சக்கரம் தொடர்கிறது. கர்மவினைகள் பற்றியும், கர்மச்சக்கரம் பற்றியும் இப்போது பார்ப்போம்.

### மூன்று வகையான கர்ம வினைகள்:

1. சஞ்சித கர்மம்:

பரம்பரை பரம்பரையாக உங்கள் மூதாதையர்கள் சேமித்து வைத்த கோடிக்கணக்கான பணத்தைப் பார்த்து... இல்லை. இது எனக்கு வேண்டாம்.

விழிப்புணர்வைக் கொண்டுவாருங்கள். ஆசைகளைப் பகுத்து ஆராயுங்கள்.
சாத்தியமாக் கூடியவற்றைக் கண்டுபிடியுங்கள்.
சாத்தியமாகக் கூடிய ஆசைகளையும், அனுபவங்களையும் முழுமையாக அனுபவியுங்கள்.
நிராசை, அதிருப்தி... நிராசை. அதிருப்தி....
என்ற கரம் சக்கரத்தின் ஓட்டத்தை எளிதில் தடுத்துவிடலாம். முயற்சியை முழுமையாகச் செய்யுங்கள் எல்லாம் சாத்தியமே!

'நான் இப்பொழுது எவ்வளவு சம்பாதித்திருக்கின்றேனோ அதுமட்டும் தான் என்னுடையது. மற்ற எல்லாவற்றையும் ஊர்மக்களுக்குத் தானமாகக் கொடுத்து விடுங்கள்..' என்று பணத்தைப் பொருட்படுத்தாமல் இருப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா?
நிச்சயம் பணத்தை வேண்டாம்! என்று சொல்லமாட்டோம் தானே?

அதை மிகவும் பத்திரமாக எங்கு வைத்திருப்போம்? வங்கியின் சேமிப்புப் பகுதியில் வரவு வைத்திருப்போம்.

அதுபோல் முதன்முதலாக இப் பூமியில் ஒரு செல் உயிரினமாகத் தோன்றியது முதற்கொண்டு அடுத்தடுத்து எடுத்த எல்லாப் பிறவிகளிலும் நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த கர்மவினைகளின் தொகுப்பும், பரம்பரை சொத்துப் போன்று உங்களுடன் ஒவ்வொரு ஜென்மத்திலும் வருகின்றது. அதைத்தான் சஞ்சித கர்மம் என்று சொல்வோம்.

ஊதாரித்தனமாக பணத்தைச் செலவு செய்தால் பணம் செலவாகிவிடும்.

விழிப்புணர்வுன்றி நாம் வாழ்க்கையைச் செலவு செய்யும்போதெல்லாம் கர்மவினைகள் வரவாகி வந்து சேரும். கர்மச்சுமை அதிகரிக்கத் துவங்கிவிடும்.

2. பிராரப்த கர்மம்

உங்களுடைய பெயரில் எவ்வளவு பளம் வங்கியில் இருக்கிறது என்று உங்களாலேயே கணக்கு வைத்துக்கொள்ள முடியாத அளவு பொருஞ்செல்வம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது 'ஒரு அருமையான சுற்றுலாப் பயணத்திற்குச் சென்றுவரலாம்' என்று முடிவெடுத்திருக்கிறீர்கள். ஒரு பூங்காவிற்குச் செல்லவேண்டுமானால் வங்கியில் இருக்கும் மொத்தப்பணத்தையுமா எடுத்துக்கொண்டு போகப்போகிறோம். தேவையான அளவு பணத்தை நாமே தேர்வு செய்து எடுத்து செல்கிறோமல்லவா?...

எப்படி சுற்றுலாவிற்கு மொத்த சேமிப்பிலிருக்கும் பணத்திலிருந்து தேவை-யானதை மட்டும் எடுத்துச் செல்வோமோ, அதேபோன்று ஒவ்வொரு பிறவியை எடுக்கும் பொழுதும் எல்லாப் பிறவிகளிலும் சேர்த்த கர்மவினைகளின் மொத்தத் தொகுப்பாய் இருக்கும் சஞ்சித கர்மவினைகளிலிருந்து தேவையான அளவு கர்மத்தை நாமே சுயமாகத் தேர்வு செய்து எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு பிறக்கும்பொழுது சுயமாக நாமே தேர்ந்தெடுத்துவரும் கர்மவினைகளுக்குப் பிரார்ப்த கர்மம் என்று பெயர்.

3. ஆகாமிய கர்மம்:

கணக்கிட முடியாது பணம் கர்மவினையாக ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. நாம் எப்போதும் பணத்தைச் சம்பாதிக்கவே பார்ப்போம். ஆனால் கர்மங்கள் சொலவு செய்யப்படவேண்டும்.

கோடிக்கணக்கான கர்மவினைகளிலிருந்த ஒரு நூற்றை மட்டும் எடுத்துக்கொண்டு பிறந்தோமானால், பிறக்கும்போது எடுத்துவந்த பிராரப்த கர்மத்தின எண்ணிக்கை 100. அப்படியென்றால் இப்பிறவியில் செலவு செய்யப்பட வேண்டிய கர்மவினைகளின் எண்ணிக்கை 100.

'நிம்மதியுடன் வாழ்ந்து அனுபவித்து விட்டுதான் வர வேண்டும்' என்று ஒரு சுற்றுலாவிற்குச் செல்கின்றீர்கள். ஆனால் அங்கு சென்றதும் அங்கிருக்கும் சூழலைப்பார்த்த பின, வந்த வேலையை மறந்துவிட்டு.....

அங்கு நின்றுகொண்டிருக்கும் கார்களின் கண்ணாடிகளைத் துடைத்துக் கொடுத்த பத்து ரூபாய், இருபது ரூபாய் என்று சம்பாதிக்கத்துவங்கினால் என்னவாகும்.... சுற்றுலாவை அனுபவித்த திருப்தி முதலில் கிடைக்காது.

அடுத்ததாக செலவழிக்க எடுத்து வந்த பணம் குறையுமா? அதிகரிக்குமா? அதிகரிக்குமல்லவா?

அதேபோன்று பிறக்கும்பொழுது எடுத்துவந்த கரமவினைகளை செலவு செய்யாமல், சமுதாயத்தைப் பார்த்தும், சுற்றத்தாரைப் பார்த்தும், உற்றாரைப் பார்த்தும், உங்களுடைய சொந்த ஆசைகளை வாழாமல் மற்றவர்களுடைய ஆசைகளையும் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையையும் சேர்த்து வாழத்துவங்குகிறீர்கள்.

விழிப்பணர்வின்றி வாழ்க்கையை வாழும்போதெல்லாம் புதிதாய் வேலை செய்து மேலும் பணம் சம்பாதிப்பது போன்று, புதிதாய் கர்மவினைகளை சேகரிக்கத் துவங்குவீர்கள். இவ்வாறு புதிதாகச் சேர்க்கும் கர்மவினைகளுக்கு ஆகாமிய கர்மங்கள் என்று பெயர்,

### விழிப்புணர்வின்றி அறியாமையில் வாழும் வாழ்க்கை முறை.

(ஒவ்வொரு பிறவியின் முடிவிலும் சஞ்சித கர்மச்சுமை கொஞ்சம்கூட குறையாமல் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. )

பிராரப்த கர்மத்தோடு மனிதன் பிறக்கின்றார்.

வாழும்போது ஆகாமிய கர்மத்தை சேகரிக்கத் துவங்குகின்றார்.

இரண்டு பெட்டி பிரார்ப்த கர்மத்தை எடுத்துக் கொண்ட பிறந்த மனிதன், விழிப்புணர்வின்றி, அறியாமையில் வாழ்க்கையை வாழ்ந்தால், புதிதாக இரண்டு பெட்டி ஆகாமிய கரம் வினைகளைச் சேகரித்துக் கொள்கிறான். இதனால்தான் கர்மச்சக்கரம் நிறைவடையாமல் மேலும், மேலும் தொடர்ந்துகொண்டே செல்கிறது.

### ஞானக் தன்மையில் வாழும் வாழ்க்கை.

(ஒவ்வொரு பிறவியின் முடிவிலும் கொஞ்சம் கொஞ்சமாக கர்ம வினைகள் முழு-மையாக தீர்க்கப்படுவதால் சஞ்சித கர்மச்சுமை படிப்படியாக குறைகின்றது)

இரண்டு பெட்டி பிராரப்த கர்மவினையோடு பிறந்த ஒரு மனிதன், ஞா-னகுருவைச் சந்தித்து முன்ஜீவன் முக்தர்களாக வாழ்க்கையை வாழத்துவங்கும் பொழுது இரண்டு விஷயங்கள் நடைபெறுகின்றன.

1. பிரரப்த கரமத்தின் சுமையையும், தாக்கத்தையும் எரித்து விடுகிறார்.
2. மேற்கொண்டு புதிதாக ஆகாமிய கரமத்தைச் சேர்க்காமல் தப்பித்து விடுகிறார்.

இதில் அம்மனிதர் இப்பிறவியில் எடுத்து வந்த கர்மங்களை மட்டும்தான் முற்றிலும் எரித்துள்ளார். அடுத்த ஜென்மத்திலும் இதுபோன்று கொஞ்சம் கொஞ்சமாக கர்மங்களை கறைக்க வேண்டும் என்று முடிவு எடக்கின்றார்.

அப்படி வாழும்போது ஒரு நடைமுறைச் சிக்கல் எழும். எத்துணை பிறவி அதற்குப் பின் எடுத்தாலும் எந்த ஆகாமிய கரமங்களையும் சேர்க்காமல், எடுத்து வந்த பிராரப்த கரமத்தை மட்டும் செலவழித்தால்தான் மலைபோல் குவிந்திருக்கும் சஞ்ஜித கரமத்தைக் குறைப்பதற்கு வழியிருக்கிறது.

இல்லையென்றால் சஞ்ஜித கரமச்சுமை குறையாது. ஆகாமிய சுமையை சேர்த்துக் கொண்டு செல்லும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயமும் கவலையாக வந்து சேரும்.

### குருவின் கருணையால் குருவின் சாந்நித்யத்தில் ஜீவன் முக்தர்களாக வாழும் வாழ்க்கை முறை.

(சஞ்ஜித கர்மங்கள் குருவின் அருளால் முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும். இவர்கள் வாழும்போதே வாழ்ந்து ஜீவன் முக்தர்களாகும் பேறு பெறுகிறார்கள்)

ஜென்மஜென்மமாக ஒருவர் எவ்வளவு கர்மச் சுமைகளைச் சேர்த்து வைத்திருந்தாலும், அந்த கரமவினைகளெல்லாம் வாழ்கின்ற ஞான குருவின அருள் பெற்றதும், சூரியனைக் கண்டதும் பனி கரைந்து உருகி தன்னால் வில-குவது போன்று மறைந்து விடும்.

### கர்மச்சக்கரத்திலிருந்து விடுபட சனாதன தர்மம் வழங்கும் தீர்வுகள்..... சஞ்சித கர்மத்தை எரிக்கும் பூஜை

ஞானிகள் வடிவமைத்த சடங்குகள் நிறைந்த பூஜை முறைகளால கர்மவினைகளிலிருந்து விடுபடலாம்.... பூஜை என்பது மீண்டும், மீண்டும் நாம் நம்மைவிட உயர்ந்த சக்தியோடு இணைத்துக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட வாழ்வியல் தியானம். பூஜையின்போது நாம் நம்முடைய பக்கத்து வீட்டுக்காரரிடமோ, எதிர்வீட்டுக்காரியிடமோ வேண்டிக்கொள்வதில்லை.

உயர்ந்த சக்தியோடு தொடர்பு கொள்கின்றோம். உயர்ந்த அலைவரிசையில் உள்ள இறைவனோடு தொடர்புகொள்கிறோம். நம்மைவிட உயர்ந்த அலைவரிசையில் இருக்கும் சக்தியோடு, டியூன் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட நுட்பம் பூஜை.

நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நன்றியுணர்வுடன் இறைவனை நினைத்துப் புஜை செய்வதன் மூலம் உங்களுடைய சஞ்சித கர்மவினைப்பலன்களை எளிதாக எரித்து விடமுடியும்.

ஒவ்வொரு நாளும் உங்களுக்குத் தேவை இருந்தாலும் அல்லது தேவையே இல்லாதபோதும், பூஜை செய்யும்போதெல்லாம் உங்களை உயர்த்திய தீக்ஷைகளை இழந்துவிடும். செயலிழந்து போய்விடும்.

அப்போது நீங்கள் பிறக்கும்போது உங்களுடன் எடுத்து வந்த உண்ணப்பதிவுகள் (பிராரப்த கர்மங்கள்) செயலிழந்து போகும். மேம்பட்ட உணர்வால் மேற்கொண்டு புதிய எண்ணப்பதிவுகள் (ஆகாமிய கர்மங்கள்) சேகரிப்பதும் நின்றுபோகும். எண்ணப்பதிவுகள் சேகரிப்பது நின்றவுடன் தற்போது உள்ள வினைப்பலன்கள் உங்கள்மீது செலுத்தும் ஆதிக்கமும், குறையும்.

மேலும், மேலும் உயர்ந்து, மேலும் மேலும் உயர்ந்த உணர்விலிருந்து பூஜை செய்வது, உங்களை மீண்டும், மீண்டும் மேம்பட்ட நிலைக்கு எடுத்துவரும். கர்மவினைப் பிடியிலிருந்த கழற்றிவிடும்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**

# அன்பின் தொனி - 631

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**7. தேவனுடைய உண்மை** - The faithfulness of God

e) **அன்பும் கருணையும் உள்ளவர்**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். **- யோவான் 3: 16**

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள், உமது உண்மை பெரியதாயிருக்கிறது. **- புலம்பல் 3: 22-23**

அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக் கிறது. **- 1 யோவான் 4: 8-10**

f) **உண்மையும் சத்தியமுமுள்ளவர்**

கர்த்தாவே, நீரே என் தேவன் உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன், நீர் அதிசயமானவைகளைச் செய்தீர், உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள். **- ஏசாயா 25: 1**

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது. லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவ-னுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது. **- வெளிப்படுத்தல் 3: 13-14**

பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன், இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்த வர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர், அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். **- வெளிப்படுத்தல் 19: 11**

அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம், வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. **- எபிரேயர் 10: 23**

g) **கொடுக்கிற தேவன்**

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. **- 2 தீமோத்தேயு 3: 16-17**

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? **- ரோமர் 8: 32**

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுக-ளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதா வானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார். **- லூக்கா 11: 13**

h) **மேன்மையுள்ள தேவன்**

கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்க வரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? **- யாத்திராகமம் 15: 11**

i) **தேவன் ஞானமுள்ளவர் (சர்வ ஞானி)**

தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென். **- ரோமர் 16: 27**

கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை, உம்மையல்லாமல் வே-றொருவரும் இல்லை, எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை. இனி மேட்டிமையான பேச்சைப் பேசாதிருங்கள், அகந்தையான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம், கர்த்தர் ஞானமுள்ள தேவன், அவர் செய்கைகள் யதார்த்தமல்லவோ? **- 1 சாமுவேல் 2: 3**

அவர் இருதயத்தில் ஞானமுள்ளவர், பெலத்தில் பராக்கிரமமுள்ளவர், அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப் படுத்தி வாழ்ந்தவன் யார்? **- யோபு 9: 4**


என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரிய மும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. **- சங்கீதம் 139: 4-6**

பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள் ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. **- யாக்கோபு 3: 17**

தொடரும்...




# ஓராண்டு நினைவஞ்சலி



**அன்னையின் மடியில்:** 24 - 08 - 1967

**ஆண்டவன் அழைப்பில்:** 12 - 12 - 2020

**திதி: 01-12-2021**

# அமரர் திரு. சிவஞ்ஞானம் நாகேஸ்வரன்

வேலணை மேற்கு தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும்,
ஸ்காபரோ-கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
அமரர் சிவஞ்ஞானம் நாகேஸ்வரன் அவர்களது
முதலாம் ஆண்டு நினைவு நாள் திதி 01-12-2021 புதன்கிழமையாகும்.

*எங்கள் அன்பின் உறைவிடமே பாசத்த்திற்குரிய ஈசனே!*
*உன் பிரிவால் நாம் அதிர்ச்சயில் உறைந்தோம்*
*பெருவெளியாய் காட்சியளிக்கிறது உனக்கான இடம்*
*தன்னம்பிக்கையைத் தனித்துவமாய் கொண்டாயே!*
*உறவுகளையே உம் சிந்தனையில் கண்டாயே!*
*தன்னலமற்ற ஈசனே! பன்னவன் மலரடி பறந்தாயோ கடுகதியே!*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்து ஓராண்டு*
*ஆனாலும் ஆறாது உங்கள் பிரிவுத் துயர்*
*உன் தாயாரும் உடன் பிறப்புக்களும் உன்னை எப்படியடா மறப்பார்கள்*
*உங்கள் அன்பு முகமும் உங்களது பாசமும் எம்மை விட்டு என்றுமே நீங்காது!*
*நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் எங்கள் ஒவ்வொரு அசைவிலும் நீங்களும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தினமும் உங்கள் பாதம் பணிகின்றோம்!*

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!***

**என்றென்றும் உங்கள் நினைவில் வாழும் அம்மா மற்றும் சகோதரங்கள்.**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca


25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3

உதயம் 1338 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 26, 2021

# தமிழர்தம் எழுச்சியின் தற்கால அடையாளம் பிரபாகரன்

## மலேசியா 'நக்கீரன்' எழுதிய கட்டுரை



தமிழில் படைக்கப்படும் இக்கால இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் ஆன்மிகத்தை தழுவியே அமைகின்றன. அதனால், தமிழ் இலக்கியப் பாட்டையில் ஆளாளுக்கு பாத்தி கட்டிக்கொள்ளும் போக்கு அண்மைக் காலமாக வகைதொகை இல்லாமல் பெருகி வருகிறது.

இந்நிலை அருக வேண்டுமென்றால், தமிழ் இலக்கியவாணர்களிடையே இனம், மொழி குறித்த சிந்தனை பேரளவில் மறுமலர்ச்சி காணவேண்டியது காலத்தின் கட்டாயம்.

பழந்தமிழர் சமைத்த இலக்கியப் படைப்புகளில் காதலும் வீரமும் ஒன்றையொன்று விஞ்சும் அளவிற்கு இணையாக அணி வகுத்து நிற்கும். *(உள்ளே விபரமான கட்டுரை 23ம் பக்கத்தில்)*

# கனடா வாழ் செல்வி இஷானியா மதனதீபனின் பிறந்த நாளில் புதுக்குடியிருப்பில் முதியோர்களுக்கான கௌரவிப்பு, உட்பட பல நிகழ்வுகள்



கனடாவின் மிசிசாகா நகர் வாழ் திரு-திருமதி மதனதீபன் -நிரோஷா தம்பதியினரின் செல்வப் புதல்வி இஷானியாவின் இரண்டாவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் மண்ணின் புதுக்குடியிருப்பில் முதியோர்களுக்கான கௌரவிப்பு, சிறுவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் மாணவர்களுக்கான மிதிவண்டி வழங்கல் ஆகிய பயனுள்ள நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம்பெற்றன

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# ஜனநாயகத்தை பாதுகாக்கும் ஊடகத் துறைக்கே நீதி வழங்க முடியாத ஜனநாயகமே இலங்கையில் உள்ளது

## – பாராளுமன்றில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி



இன்றும் கேள்விக்குட்பட்டே ஊடக சுதந்திரம் இலங்கையில் உள்ளது. படுகொலைசெய்யப்பட்ட ஊடகர் விடயத்திலேயே நீதி மறுக்கப்படுகின்றபோது என்ன ஜனநாயகம் இருக்கின்றது புர்ந்துகொள்ள முடிவதாக பாராளுமன்றில் உரையாற்றிய் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வெளிவிவகார மற்றும் ஊடக அமைச்சுக்களுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நேற்று வியாழக்கிழமை(25) உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தொரிவித்தார். *(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்களின் பணிமனையில் மாவீரர்களுக்கான வணக்க செலுத்தும் பீடம்



உலகெங்கும் பல நாடுகளில் அங்கத்தவர்களையும் அமைச்சர்களையும் பிரதமரையும் கொண்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்களின் பணிமனையில் மாவீரர்களுக்கான வணக்கம் செலுத்தும் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. கனடாவிலேயே அதிக உறுப்பினர்களைக் கொண்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்காக அதன் கனடிய உறுப்பினர்களால் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் இந்த உறுப்பினர் பணிமனை சிறப்பாக இயங்கிவருகின்றது.

அங்கு இன்றும் நாளையும் கனடா வாழ் தமிழ் மக்கள் மாவீரர்களுக்கான தமது வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்தும் வகையில் இந்த பீடம் அமைக்கப்பெற்றுள்ளது.

இங்கு காணப்படும் படங்களில் உணர்வுபூர்வமாக அமைக்கப்பட்டுள்ள சிறிய மண்டபம் ஒன்றில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர் மரியாம்பிள்ளை மரியராசா மற்றும் அதன் அமைச்சர்களில் ஒருவரான றோய் விக்னராஜா ஆகியோர் மாவீர்களிற்கான மரியாதையை செலுத்துவதைக் காணலாம்.

# "உதயன்" வெள்ளி விழாவையொட்டி நன்றி தெரிவிப்பபதற்கு அடையாளமாக அன்பளிப்புப் பொதிகள் வழங்குதல்

கனடாவில் கடந்த 25 வருடங்களாக தொடர்ச்சியாக "உதயன்" பத்திரிகை வாரா வாரம் வெளிவரும் வகையில் அவ்வப்போது பத்திரிகை வெளியீடு தொடர்பாக ஆதரவை வழங்கி வரும் பல நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் வெள்ளி விழாவையொட்டி நன்றி தெரிவிப்பபதற்கு அடையாளமாக அன்பளிப்புப் பொதிகளை வழ்ங்கிவருகின்றோம்.

அந்த வரிசையில் முன்னர் பல காரணங்களால் தாமதாகிய அன்பளிப்புப் பொதிகளை வழங்குதல் மீண்டும் ஆரம்பமாகியது.

நீண்ட காலமாக "உதயன்" பத்திரிகையோடு நட்பை பேணி வரும் மூவரை நாம் கௌரவித்தோம். **Scarborough TECH SOURCE** நிறுவன அதிபர் மோகன் **FRONTLINE COMMUNITY SERVICES** விஜயா குலா **ABI & AMAL REALTORS TEAM** அபி அமல் ஆகியோர்க்கு உதயன் பிரதம ஆசிரியர் அன்பளிப்புப் பொதிகளை வழங்குவதைக் காணலாம்.





